# நான்





## சமூக மாற்றத்தில் குடும்பம்

ஐப்பசி
மார்கழி
'Naan' 94

# உளவியல் சஞ்சிகை

"நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்"

# நான் உளவியல் சஞ்சிகை

மலர்: 20 இதழ்: 4
ஐப்பசி — மார்கழி 1994

ஆசிரியர்:
S. எட்வின் வசந்தராஜா
O.M.I. B.Th

இணை ஆசிரியர்:
ஜீவனதாஸ் பெர்ணான்டோ
O.M.I. B.A.

நிர்வாகக்குழு:
அ.ம.தி. மெய்யியல் மாணவர்கள்.
ஜோசப்பாலா.

ஆலோசகர்:

| | |
|---|---|
| டானியல் | O.M.I, M.A |
| டேமியன் | O.M.I M.A |
| செல்வரட்ணம் | O.M.I Ph.D. |
| ஜீவாபோல் | O.M.I, M.Phil |

இவ்விதழ் சிறக்க துணைநின்ற யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் **என். சண்முகலிங்கன்** அவர்களுக்கும், **சமூகவியல் சமூகத்திற்கும்** எமது இதய நன்றிகள்.

ஆ-ர்

தொடர்பு:
**'நான்' ஆசிரியர்,**
**சுவாமியார் வீதி,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்.**

உள்ளே...


கோரமன வெளியில்
**அபர்ணா சிவா**

காலமாற்றத்தில் குடும்ப நிறுவனம்
**என். சண்முகலிங்கன்**

மட்டக்களப்பின் இனிய பண்பாடு
**ஞா. தில்லைநாதன்**

திரைகடல் ஓடி என்ன?
**மா. உதயகுமார்**

குடுப்ப - கல்வி - இடைவினை
**பி. எவ். சின்னத்துரை**

வருத்தம் பாதி; வருந்துதல் மீதி!
**டாக்டர். செல்வி நா. நாகேஸ்வரி**

குடும்பத்தில் பிரச்சனையா?
**செல்வி உதயமதி**

இனி எப்ப வருவீங்க !
**செல்வி குயின் மேரி**

அனுபவப் பகிர்வு
**செல்வி வ. வரதகௌரி**

குடும்பத்தைக் கெடுக்க வந்த...
**ஸ்ரீபன் அந்தரராஜ்**

அர்த்தமிழந்த உறவுகளோடு ..
**வாணி ஆறுமுகம்**

வழிகாட்டும் ஆளுமை
**எஸ். சிவதாஸ்**

முரண்பட்ட உறவால் ..
**ச. இருபானந்தன்**

கண்கள் உறங்கவில்லை (சிறுகதை)
**அ. செ. மு.**

கருத்துக் குவியல் - 68



**ஆண்டுச் சந்தா** ரூ 50-00
(தபாற் செலவுடன்)
**தனிப்பிரதி** ரூ 10-00

# மாற்றங்கள் ஏற்றத்தை தரவேண்டும்.

ஒன்றினுடைய மாற்றம் அதனைச் சார்ந்த அனைத்தையும் பாதிக்கும் என்பது இயற்கை வகுத்த நியதி. இந்த நோக்கிலே எம் சொந்த மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போர் எமது சமூகத்தின் உயிர் நாடிகளான கறையற்ற கலை, கலாச்சாரம், பழம் பெருமை வாய்ந்த பண்பாடு உயர்ந்த விழுமியங்கள், உன்னத மதிப்பீடுகள், சிகரச் சிந்தனைகள். எண்ணில்லா எண்ணங்கள், உளத்தின் உண்மையான உணர்வலைகள், செம்மை பொருந்திய செயற்பாடுகள் ஆகியவற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்த மாற்றங்கள் எமது சமூகத்தின் ஆணிவேராகிய குடும்பங்களையும் பாதிக்கின்றன என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

இம் மாற்றங்கள் எம் சமூகத்தில், குடும்பத்தில் ஆக்கத்தையும் அதே நேரத்தில் அழிவையும் கொணர்கின்றன. ஆக்கத்தை தருகின்ற மாற்றங்கள் ஒருபுறத்தில் எமக்கு வளர்ச்சியையும், உயர்ச்சியையும் தருகின்ற அதே வேளையில் அழிவைக் கொண்டுவருகின்ற மாற்றங்கள் எம்மை அகதிகளாகவும், அனாதைகளாகவும், அங்கவீனர்களாகவும், அந்தரிக்கின்றவர்களாகவும், வறியவர்களாகவும், வருத்தக்காரர்களாகவும் மாற்றி எம்மிடத்திலே மனச்சோர்வுகளையும், மனவருத்தங்களையும் வருவித்து எம்மில் பல உடல் உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

இந்த உடல் உளரீதியான பாதிப்புக்கள் எம்சமூகத்தில் குடும்பத்தின் ஆளுமை வளர்ச்சியை பாதிக்கும் என்பதை நன்கு உணர்ந்தவர்களாய் அழிவைத் தருகின்ற மாற்றங்களை விடுத்து எம் சமூகத்திலே, குடும்ப அமைப்பிலே ஏற்றத்தை உயர்ச்சியைத் தருகின்ற மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிப்போம்.

# கோரமன வெளியில்...

● அபர்ணா சிவா.

நீலக்கடல்
எல்லைத்தொடு வானம்
மாலைக் கதிரவன் மேற்கில் சரிபொழுது
உடல் தழுவி நெஞ்சைக் குளிர்விக்கும்...
கடற் காற்று
தவழ்ந்து வரும் குழந்தையென
கால்களிலே முத்தமிட்டு
எனைமயக்கும் கடலலையின்
உரசலிலே...
வெண் மணலில் கால் புதைத்து - இன்பக்
கற்பனையில் மிதந்தபடி
நான் நடந்த இந்தக் கடற்கரை...

இன்றேன் என் கண்முன்
கோர மண வெளியாய்?
ஜாலங்கள் பல புரிந்து மயக்கிய வானம்
இன்றே என் கண்முன்...
ஈமத்தீச் சிவப்பாய்?
ஆலோலம் பாடி அசைந்து வந்த தென்றல்
இன்றேன் முகாரி ராகச்
சோகச் சுமையுடனே?

ஓ...
நிஜமற்ற எம் தேச - மனிதர்களின்
நிலையற்ற உயிர் வாழ்வின் - சின்னமென
தன் வாழ்நாழின் ஆசைகளை
சுவாலைக் கரங்களுக்குள் - மூச்சோடு
சேர்த்து முற்றாய் இழந்துவிட்டு
தீக்குள் எரிந்தபடி - ஓர்மனிதன்
என் கண்முன் கிடப்பதாலோ ?

# காலமாற்றத்தில் குடும்ப நிறுவனம்

★ என், சண்முகலிங்கன் M.A.
சமூகவியல்துறை
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

குடும்பத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்? காலமாற்றத்தில் அது இல்லாது போய்விடும் என்ற கடந்தகால முன்மொழிவுகளைப் பொய்யாக்கி தானே ஒரு சிறு உலகாய் - சமூகத்தின் அடிப்படை அலகாய் குடும்பம் நிலைபெறக் காணலாம்.

'குடும்ப அமைப்பு சரியாக செயற்படா விட்டால் ஒரு நாகரிகத்தின் பிழைப்பு என்பது கேள்விக்குறியாகிவிடும். குடும்பத்தை உருவாக்குதல் என்பது மனித இயற்கை அல்லது இயல்பூக்கத்தின் வழியது' என்ற கருத்துநிலை இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் உண்மையாயிருக்கின்றது. குடும்பம் தொடர்பான அனைத்து தரிசனங்களுமே மனித இயற்கை - சமூகம் என்ற இந்த இரண்டு அடிப்படைகளையுமே மையமாகக் கொண்டு அமையக்காணலாம்.

தனி மனிதரின் தேவைகளை நிறைவு செய்வதில், ஒரு குழந்தையின் ஆளுமை விருத்தியில் குடும்பத்தின் அவசியத்தை உளவியலாளர்களும், உள மருத்துவர்களும் எழுதிநிற்கின்றனர். சமூகவியலாளர்களோ, பரந்த சமூகத்தின் இன்றியமையாத பகுதியாக குடும்பத்தின் இயல்பினை ஆராய்கின்றனர்.

சமூகத்தின் நிலையான கூறுகளின் இயல்பான ஒருங்கிணைப்பாக காணும் **அமைப்பியல் - செயற்பாட்டியல் (Structural - Functional) கோட்பாட்டினர்** சமூகத்தின் நிலைபேற்றிற்கும் சுமுகமான இயக்கத்திற்கும் குடும்ப நிறுவனத்தின் ஒழுங்கமைப்பை வலியுறுத்துகின்றனர். சமூக வாழ்வின் முரண்நிலை யதார்த்தத்தை இந்த செயற்பாட்டியல் வாதிகள் கவனிக்கத் தவறிவிட்டமையை **சமூக முரண்பாட்டு**

(Social Conflict) கோட்பாட்டாளர்கள் சுட்டுவதுடன், இந்த முரண்பாட்டில் ஆதிக்கம் செலுத்தும் வகுப்புகளின் ஆர்வங்களையே குடும்பம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களும் சார்ந்துள்ளன என்றும் விளக்கினார்கள். இதற்காக குடும்ப நிறுவனத்தை இல்லாதொழித்திட புரட்சி சிந்தனையாளர்கள் விரும்பியதும் உண்மைதான். எனினும் இதற்கான பிரதியீடும் சகோதரத்துவம் (Brotherhood/Sisterhood) எனும் குடும்ப உறவின் வழியான மனித உணர்வுத் தடத்தில்தான் அமைந்திருந்தன என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதுபோலவே மனித இயல்பூக்கங்களை - மனவெழுச்சி நிலைகளை கட்டுப்படுத்துகின்றது எனும் உளப்பகுப்பாய்வாளர்களின் வாதங்களும் சமூகமயமாக்கம் பற்றிய உளவியலாளர்களின் கருத்துக்களினாலேயே மறுதலிக்கப்படக்கூடியன.

இந்த ஆய்வுகள் - விளக்கங்கள் - விமர்சனங்களையெல்லாம் கடந்து - குடும்ப நிறுவனம் தனது அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது. சமூக மாற்றங்களிடை அடிப்படையான பொருளாதார உற்பத்தி முறைமைகளின் மாற்றத்தின்போது தவிர்க்க முடியாதபடி குடும்ப நிறுவனமும் தன்னில் மாற்றங்களை எதிர் நோக்கியபோதும், இவற்றுள் தன்னிலை அழிந்து போகாமல் நிமிருதற்கான வழிவகைகளையும் அது தேடிக்கொள்கின்றது. தனது இந்தத் தேடலின்போது கடந்த காலத்து குடும்பம் தொடர்பான தரிசனங்களிலிருந்து பொருத்தமான அனுபவங்களைப் பயன்படுத்துகின்றது.

குடும்ப நிறுவனம் எதிர் கொண்ட மாற்றங்களை விளங்குதலில் அருகில் தரப்பட்ட வகைப்பாடு துணையாகலாம். இம்மாற்றங்களிடை, முதல் நிலைக் குழுவான குடும்ப உறுப்பினர்களிடையான உறவு நெருக்கம் தளர்வு காண்பதும், உறுப்பினர்கள் மீதான சமூக நியமங்கள் / நெறிமுறைகளின் அழுத்தம் பலவீனப்படுவதும் சிறப்பான கவனம் பெற வேண்டியன.

புதிய தொழிநுட்ப மாற்றங்கள், வேலை மயமாக்கம் (Westerni-zation), புதிய பண்பாடுகளை நோக்கிய அசைவு என்பவற்றிடை, நியமமறு (Normlessness) நிலைகளுக்கு தனி உறுப்பினர்கள் உள்ளாவதும், எதிர் கொள்ளும் பண்பாட்டு முரண் நிலைகளை விளக்க முடியாமல் உடைந்து போவதும், உளநோய் வசமாவதும் குடும்பம் பற்றிய இன்றைய விழிப்புணர்வின் அடிப்படைகளாவன.

குடும்பம் தொடர்பான எங்கள் பணிகளோ இன்னும் அதிகமானவை; அவசரமானவை.

மரபுவழிச் சமூக அமைப்பிலும், நவீன சமூகங்களிலும் குடும்பத்தின் வடிவம் – செயற்பாடு – கருத்துநிலை என்பன எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன என்பதனை பின்வரும் அட்டவணை வழி குடும்பம் பற்றிய ஆய்வாளர்கள் வகைப்படுத்திக் காட்டுகின்றார்கள்.

| மரபுவழிச் சமூகங்களில் | நவீன சமூகங்களில் |
| --- | --- |
| 1. உறவுநிலையானது சமூகத்தினடியாகவே அமைகின்றது. ஒருவரின் அனைத்து செயற்பாடுகளுமே ஒரு உறவுக்குழுவின் உறுப்பினர் என்றவகையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. | உறவுநிலையானது பொருளாதார, அரசியல், சமூகவாழ்வினின்றும் தனித்ததாக அமைகின்றது. ஒருவரின் தொழில் தேர்வானது அவரது உறவு நிலைகளுக்கு புறம்பாக நிகழ்கின்றது. |
| 2. மகன் தந்தையின் அந்தஸ்தையும் தொழிலையும் பிறப்புரிமையாக எய்துகின்றான். | சமூக அசைவு 'திறமை'யின் அடிப்படையில் அமைகின்றது. |
| 3. புவிசார் – சமூக அசைவு குறைவானது. | அதிகளவு புவிசார் – சமூக அசைவு நிகழ்கிறது. |
| 5. பெரும்பாலரான உறுப்பினரின் தொழில் மையமாய் வீடே அமைகிறது. வீடே பள்ளிக்கூடமாய், வைத்தியசாலையாக, முதியோர் இல்லமாய் விளங்குகின்றது. | தொழில் வீட்டிற்கு வெளியே நிகழ்கிறது; வீடு உற்பத்திக்கு பதில் நுகர்வினையே மேற்கொள்ளுகிறது. |
| 4. கூட்டுக்குடும்பமே அடிப்படை அலகாக அமைகிறது. | தனிக்குடும்பமே அடிப்படை அலகாகின்றது. |
| 6. பிள்ளைகள் மீது பெற்றோரின் ஆதிக்கமும். பெண்கள் மீது ஆண்களின் ஆதிக்கமும் செலுத்தப்படுகிறது. | சார்பளவில் சமத்துவமான இலக்குகளும் நடைமுறைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. |
| 7. உறவு நிலைப் பிணைப்பானது தனிமனித திறங்களுக்கேற்ப நயங்களை மட்டுப்படுத்தி, பொது குடும்ப நலனையே அழுத்துகின்றது. | தனிமனித முன்னேற்றத்தையோ, பொருளாதார நலன்களையோ உறவு நிலை கடப்பாடுகள் கட்டுப்படுத்துவதில்லை. |
| 8. கடமை, மரபு. அதிகாரத்திற்கு தனிமனிதர் அடங்கிப்போதல், விதியென்று வாழாவிருத்தல். | தனிமனிதர் உரிமைகள், சமத்துவம், சுதந்திரம், சுயதிறனியலை எய்தல். |
| 9. வீட்டுக்கும் சமுதாயத்திற்குமிடையில் மிகச்சிறிய வேறுபாடே காணப்படும். பெருமளவிலான நிறுவனங்கள் இல்லை. | வீட்டிற்கும் வெளிஉலகிற்குமிடையில் தெளிவான வரையறையுண்டு வெளியுலகம் புறவயமானது, போட்டியானது; அச்சுறுத்துவது. |

எங்களைப் பொறுத்த வரையில் நல்ல குடும்ப வகை எது? எனக் காண்பதும், நமக்கு பொருத்தமானது எது என முடிவு செய்வதும், எங்கள் விழுமியங்களுக்கு ஏற்ப எங்கள் சமூக அமைப்பில் – நாங்கள் காண விரும்பும் சமூக அமைப்பின் வழியேதான் தீர்மானிக்கப்பட வேண்டியன. பண்பாட்டின் தனித்துவம் துலங்கும் அழுத வேளையில், கடந்தகால அனுபவங்களினடியாக குடும்ப நிறுவனத்தில் காண விழைகின்ற மாற்றங்களையும் இயல்பாய் இணைத்து, எமது குடும்பத்தை சிறப்பாக அமைத்தல் வேண்டும். குடும்பம் தொடர்பான இன்றைய ஆய்வு அனுபவங்களும் இதனையே உணர்த்தி நிற்கின்றன.

எங்கள் குடும்ப அமைப்பிலே குடும்ப உறுப்பினர்களிடையே பால் ரீதியான அடக்குமுறை பேதங்களை முற்றாக நிராகரித்து, பரஸ்பர அன்புறவாக குடும்பம் அமைதலை உறுதிசெய்வதுடன், மரபுவழி குடும்ப அமைப்பில் கூட்டுக் குடும்ப வாழ்வில் நாம் கண்ட பயன்களை மீட்டெடுக்கும் விதமாக எங்கள் குடும்ப வடிவினை புதுக்கிட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, குடும்ப உருவாக்கத்திலேயே நாம் இடறிக் கொள்ளும், குடும்பத்தின் அடிப்படைகளையே தகர்த்து நிற்கின்ற ‘சீதனம்’ என்ற வழக்கத்தை ஒழித்தே ஆகவேண்டும்.

உருவாகப்போகின்ற குடும்பத்திற்காக உருக்குலைகின்ற குடும்பங்கள், உருவாக்கும் பணம் தேடி அலைகின்ற பயணங்கள், போகிற போக்கில் நம் விழுமியங்களைத் தொலைத்து விடுகின்ற அவலங்கள், ஈற்றில் ‘குடும்பம்’ என்ற எலும்புக் கூண்டை அமைத்து விட்டாலும் அதிலே உயிர் இல்லாது போய்விடும் முடிவுகள் எனத்தொடரும் துயரங்களுக்குப் பின்னால், இந்த சீதனம் என்ற எம் தேசத்து வழமை அமைதலை நாம் உணர்ந்து அழிக்காதவரை, குடும்பத்தின் இனிய கனிகள் எல்லோர்க்கும் கிட்டுவதில்லை.

இந்த உலக குடும்ப ஆண்டில், எங்கள் சமூக விழிப்புணர்விடை இந்த இலக்கும் இசைந்திடட்டும், அதன்வழி எதிர்காலத்தில் குடும்ப நிறுவனத்தின் அர்த்தங்கள் இங்கே நம் எல்லோருக்கும் கனிந்திடட்டும். ●

---

☐ *திருமணம் என்பது ஆண் பெண் நட்பு.*
*நம்பிக்கையில்லாமல் நட்பு வளராது.*
*நம்பிக்கையோ நேர்மையிலிருந்து மலருவது.*

**- சாமுவேல் ஜோன்சன்**

# மட்டக்களப்பின் இனிய பண்பாடு

மரபுவழி பண்பாட்டுக் கோலங்கள் பலவும் மறையாது நிலவும் பிரதேசம் மட்டக்களப்பு. சமூக வாழ்வினுக்கு உரமூட்டும் குடும்ப நிறுவன அமைப்பு இன்றும் இங்கு பேணப்படுகின்றது. மட்டக்களப்பின் பெரிதும் மாறா விவசாய புலங்களிடை விருந்தோம்பல், பெற்றோரை பெரியவரைப் பேணிவாழ்தல், குடும்பத்தை விட்டுப் பிரியாமை, விருப்ப திருமண முறை என இனிய பண்புகளைச் சிறப்பாகக் காணமுடிகின்றது.

'மட்டக்களப்பார் பாயோடு ஒட்டவைத்து விடுவார்கள்' என மற்றவர்கள் சொல்வதுண்டு. உண்மையில் இது அங்குள்ள குடும்பங்களின் விருந்தோம்பல் ஆழத்தினையே குறித்து நிற்கின்றது. வீட்டுக்கு வந்தவரை பாய்விரித்து அமரச் செய்து, பால், தயிர், உணவு பரிமாறிய பின்பு தான் வந்த விடயத்தைக் கேட்பார்கள்.

● ஞா. தில்லைநாதன்
சமூகவியல் சிறப்புக்கலை
யாழ். பல்கலைக்கழகம்

குடும்ப உறவுகளில் பிரிந்தவர் யாராவது மீள வீட்டுக்கு வந்தாலும், பேதம் மறந்து தேனீர் - பால் கொடுத்து பகைமையை முடிக்கும் வழமை இன்றும் தொடர்கின்றது. இன்றைய இடம் பெயர் வாழ்விடையும் அவலங்களிடையேயும் இந்த இனிய விருந்தோம்பல் பண்பு குறைந்ததில்லை.

குடும்பத்து உறுப்பினர்கள் தூர இடங்களுக்கோ - நீண்ட நாட்களுக்கோ பிரிந்து போவதை இம் மக்கள் விரும்புவதில்லை.

'நீ உழைக்காட்டாலும், படிக்காட்டாலும் பரவாயில்லை எங்களோடை இருந்து ஏதாவது செய்து, கஞ்சியாவது குடிச்சாலும் சந்தோஷமா இருப்பம்' என்பது இன்றும் குலையாத உறுதியுடன் பேணப்படுகின்றது. இங்கே அன்பு உறவிற்கே முதலிடம் கிடைக்கின்றது. படிப்பு - பொருள் தேடல் என்பவைகூட இந்த உறவுப் பிணைப்புக்காகப் புறக்கணிக்கப்படலாம்.

கல்வி, பொருளாதார வளம் என உயர்ந்துவிட்ட நிலையிலும் கூட தம் பெற்றோரை, ஆச்சி, பெத்தப்பா (பாட்டன், பாட்டி) என தமது குடும்பத்து மூத்தோரை முதன்மைப்படுத்தி, வழிகாட்டிகளாகக் கொள்ளும் பண்பும் இங்கே தளர்ந்ததில்லை. இங்கே முதியவரும், இளையவரும் கூடிமகிழும் நாட்டுக்கூத்து பயில் களங்களிடை - தலைமுறை இடைவெளியின்றி இணைகின்ற உறவுகளின் இனிமைகளைத் தரிசிக்க முடியும்.

திருமண முறையிடைகூட விரும்பிய உறவுகளை சேர்வதற்கான பண்பாட்டு அங்கீகாரம் இங்கே கிடைக்கின்றது. இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டாக, சித்தாண்டி கந்தசாமி கோயில் மயில்-

கட்டுத் திருவிழா நடைமுறையைக் குறிப்பிடலாம். இந்த திருவிழா இரவு இக்கிராமத்தில் திருமணங்கள் நிகழும். இவை பதிவிலோ, தாலி கட்டலோ இல்லாத திருமணங்கள். விரும்பிய பெண் வீட்டுக்கு ஆண் சென்று இரவு தங்கினால் அவர்கள் திருமணம் செய்ததாக சமூக அங்கீகாரம் கிடைத்து விடுகிறது. பின்னாலேதான் சட்ட சம்பிரதாயங்கள். இந்த சம்பிரதாயங்களும்கூட இன்னும் இனிதாய் தொடர்வனதான்.

மாப்பிள்ளை கேட்டு பெண் வீட்டார், கொழுக்கட்டைப் பெட்டியுடன் மாப்பிள்ளை வீடு செல்வதும், பதிலுக்கு சம்மதம், சந்தோஷம் தெரிவித்து மாப்பிள்ளை வீட்டார் பலகாரப் பெட்டிகளுடன் பெண் வீடு செல்வதும், திருமணம் முடிந்ததும் புதுமணத் தம்பதியர் கால் மாறி மாப்பிள்ளை வீடு சென்று தங்குவதும் புதுமணத் தம்பதியருக்கு பெண் வீட்டார் ஆறு மாதம் உணவு வழங்குதலும் மாறாத பண்புகளாய் இன்றும் இங்கே இனிய குடும்ப கோலமாய் விளங்குகின்றது.

இந்த இனிய குடும்ப வாழ்வு முறைகளை பெருமையோடு பேணிக் கொள்ளும் மட்டக்களப்பின் கிராமிய வாழ்வு ஏனைய பகுதிகள் ஏங்கும் குடும்ப இனிமைகளை மீளப் பெறுவதற்கான மாதிரிகளாகக் கொள்ளப்படக் கூடியன. ●

## நான்

தனது உரத்த ஓசையை
பிறர்
உதடுகளிலிருந்தே உறுத்துகிது.

ஒரு 'நான்'
நிமிர்ந்து நிமிர
வளைக்கபடுகின்ற
முதுகுத் தண்டுநள் எத்தனை?

எனது எனதுஎன்றே
நான் ஏறிச் செல்லும்
ஏணிப் படிகளில்
நசுங்கும் தலைகளை
யார் கணக்கெடுத்தார்கள்?

விநாடி வினாக்களை
'நான்' விரிக்கின்றது- பலர்
யுக. முகத்தில்
இரத்தக் கீறல்கள்
விழுகின்றது.

பிறரின் துக்கங்களை பிழிந்து
தனது கனவுகளையும் கூட
பிறரின்
பகல் மைதானங்களில்
தனது வசந்த இரவுகளையும்
கொழுக்க வைக்கும் நான்
முள் முள்ளாய் தனது காதில்
உச்சரிப்பதை
நியாயம்- எத்தனை நாள்
பொறுக்கும்?

இது. எனது... இது எனது...
இந்தத்
தன்னலப் புன்னகையைச்
சிலர் ஆராதிக்கலாம்.
பலர் அதற்கு முலாம் பூச
முயற்சியும் செய்யலாம்
சட்டம் அதற்கு
அட்சதை போடலாம்.
ஆனால்...

● ராதா

# திரைகடல் ஓடி என்ன?

**மா. உதயகுமார்**
சமூகவியல் சிறப்புக்கலை (3ம் ஆண்டு) யாழ். பல்கலைக்கழகம்

**வெ**ளிநாட்டு இடப்பெயர்வுகளில் பொருளாதார நோக்கங் களை அடிப்படையாகக் கொண்டு வேலை வாய்ப்புக்களை தேடிச் செல்லும் இடப்பெயர்வுகளே அநேகம். இதில் குடும்பத்தில் கணவன் அல்லது மனைவி, அல்லது பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் என வெளிநாட்டு இடப்பெயர்வுகள் இடம் பெறுகின்றன.

கணவன் அல்லது மனைவி வெளிநாடு வேலை தேடிச் சென்றி ருந்தால் பிள்ளைகள் இவர்களின் அன்பை பெறமுடியாது. பிள்ளை களது ஆளுமை வளர்ச்சி குன்றுகின்றது. பிள்ளை சிறந்த முறையில் சமூக மயமாக்கப்படுவதற்கு பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகும். அமெரிக்காவில் (புளும்) செய்த ஆய்வு முடிவுகளின்படி 17 வயதில் அளக்கப்படும் மாணவர்களின் விவேகத்தில் 1 வயதில் 20%மும், 4 வயதில் 50%மும், 8 வயதில் 80%மும், 13 வயதில் 92%மும் விருத்தியடைவதாக (புளும் உடைய ஆய்வுகள்) சொல்லப்படுகின் றது. எனவே சிறுவர்களது விவேக அறிவில் பெற்றோர்கள் முக்கிய பங்கை வகிக்கிறார்கள். எனவே கணவன் அல்லது மனைவி வெளி நாடு செல்லும் போது பிள்ளைகள் மீது அவர்கள் செலுத்த வேண் டிய பங்கு எஞ்சிக் கிடக்கின்றது.

பாலியல் ரீதியான பிரச்சனைகளும் ஏற்பட வாய்ப்பேற்படுகின் றது. வெளிநாடு சென்ற சில கணவர் அங்கு வேறு பெண்ணோடு வாழும் நிலையும், மனைவி காத்திருக்க வேண்டிய நிலைகளும், உள்நாட்டில் சில மனைவியர் வேறு ஆணோடு வாழும் நிலையும், கணவன், மனைவி யருக்கிடையே நம்பிக்கையற்ற தன்மையும், மனமுறிவுகளும், மண முறிவுகளும் எமது சமூகத்தில் ஆங்காங்கே அவதானிக்கப்படும். இவ் வாறான நெருக்கிடைகளும் எமது குடும்ப நிறுவனங்களை பாதிக் கின்றது.

எதிர்கால முதலீடுகளாய் பிள்ளைகளை வளர்த்த பெற்றோர் கள், பிள்ளைகள் வெளிநாடு சென்றதனால் தமது முதுமைக்காலத் தில் பராமரிக்க, அன்பு செலுத்த இதர நலன்களை கவனிக்க யாரு மற்று அநாதைகளாய் நிற்க வேண்டிய நிலையும் காணப்படுகின் றது. கூட்டு குடும்ப வாழ்வில் பெரும் தலைமகனாக விளங்கிய முதி யோர்கள் இன்று முடமாக கிடக்கும் நிலை. பாரம்பரியமாக முதி யோருக்கு கொடுத்து வந்த மதிப்பு குறைந்து காணப்படுகிறது. பிள்

ளைகளை பிரிந்ததால் விரக்தி, மனச்சோர்வு போன்ற உள நோய்களும் ஏற்படுகின்றது. இதனாலும் குடும்ப நிறுவனம் பாதிப்படைகின்றது.

வேலை தேடிச் செல்வோரில் பலரும் குறுக்கு வழிகளில் பணம் சம்பாதிக்க முனைகிறார்கள். போதைவஸ்து, ஆட்கடத்தல் போன்றன. இதனால் அந்நாட்டு அரசுகளால் நீண்டகாலத் தண்டனைகளையும், மரணதண்டனையையும் கூட ஏற்க வேண்டிய நிலை அங்கு ஏற்படுகின்றது. இதனால் இவர்களை நம்பி இங்கு இருக்கும் குடும்பங்கள் சீரழிந்து போகவேண்டிய நிலைகளும் இருக்கின்றது. கடன்பட்டு வெளிநாடு சென்றவராயின் மேலும் கடன் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டிய குடும்பமாக இருக்கிறது. இது குடும்ப நிறுவனத்தை தாக்குகின்றது. வேலை வாய்ப்புக்களை தேடிச் செல்லும் போது நாடு கடந்து உயிரை பணயம் வைத்து களவாய் கடல் பிரயாணம் போன்றவற்றை கூடச் செய்கின்றனர்.

பெற்றோரை, பிள்ளைகளை வீடியோவிலும், புகைப்படங்களிலும் பார்க்க வேண்டிய நிலை குறிப்பாக வயதான பெற்றோர்கள் பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளை கொஞ்சி விளையாடி, நேரடியாக பார்த்து கதைத்து வாழ முடியாத நிலை, தொலை பேசியில் கதைத்தாலும் வெளிநாட்டில் பிறந்த பிள்ளைகளுடன் தாய்மொழியில் பேச முடியாத நிலை, இது போன்ற நிலைகளால் முதியோர்கள் விரக்தி நிலைக்குள்ளாகிறார்கள் இது குடும்ப நிறுவனத்தை தாக்குகின்றது.

அயல்வீட்டைப் போல் அல்லது உறவினர்களை போல் நாமும் வாழ வேண்டும் எனும் பண்பு நமது சமூகத்தில் மேலோங்கி காணப்படுகிறது. இதனால் அயல் வீட்டில் அல்லது உறவுக்காரரில் யாராவது வெளிநாடு போய் உழைத்து இங்குள்ளவர்கள் டாம்பீகரமாகத் திரியும் போது 'அட நம்மால் போக அல்லது ஒரு பிள்ளையைத்தானும் அனுப்ப முடியவில்லையே வெளிநாடு' எனும் ஏக்க தவிப்பு பல குடும்பங்களிலும் காணப்படுவது நடை முறையில் கண்கூடு.

கல்விக்கு எமது சமூகத்தில் இருந்த மதிப்பில் விழுக்காடு காணப்படுகின்றது. வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கும், வெளிநாட்டுத் திருமணங்களுக்கும் முன்னைய காலங்களைவிட (1978 க்கு முன்) கேள்வி அதிகரிக்கிறது. இது எமது குடும்ப நிறுவனங்கள் பேணி வந்த, மதித்து வந்த கல்வியில் அக்கறைக்குறைவு. இதுகும் குடும்ப நிறுவனங்களை நேரடியாக இல்லாவிட்டாலும் மறை முகமாக பல தாக்கங்களுக்கு ஆளாக்குகின்றது. இவ்வாறே வெளிநாட்டு இடப்பெயர்வு நெருக்கீடுகளும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

# குடும்ப - கல்வி - இடைவினை

□ திருமதி பி, எவ். சின்னத்துரை
அதிபர், புனித சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்

காலத்திற்கு காலம் சமூகமானது மாற்றங்களைத் தன்கைத்தே ஏற்றுக் கொண்டே வருகின்றது. நீண்ட காலத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்களும் குறுகிய காலத்தில் ஏற்படும் புரட்சிகரமான மாற்றங் களும் சமூகத்தில் ஆரோக்கியமான அல்லது ஆரோக்கியமற்ற தன் மைகளை ஏற்படுததுகின்றன. பொதுவாகப் பொருளாதாரம், கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடு இவற்றினூடாக இம் மாற்றகங்ள் மக்களைச் சென்றடைகின்றன. இவற்றை உள்வாங்கும் தன்மை ஆரம்பத்தில் சிக்கலானதாகவும் அமையும் மாற்றத்தின் விளைவுகளை உடனடியாக ஏற்றுக் கொள்ளவும் மக்கள் தயங்குவர்.

கல்வியின் பின்னனியில் நோக்கின் அண்மைக் காலங்களில் கல்வி வளர்ச்சி துரிதமாக முன்னேறி வருவது கண்கூடு. இன்று பல்கலைக் கழகங்களில் பெருமளவில் பெண்களே கல்வி பயில்கின்றனர். பல் வேறு திணைக்களங்களிலும் பெண்களே அதிகமாகப் பணி புரிகின் றனர். துரித கல்வி வளர்ச்சி இதனால் ஏற்பட்ட பெண்களின் கல்வி உயர்ச்சி சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தமது பாரம்பரியமான குடும்ப சூழல்களில் இருந்து விடுபட்டுப் பொருளா தாரத் தேவைகளுக்காகவும் தமது உயர்விற்காகவும் உத்தியோகம் பார்க்கும் பெண்களின் குடும்பங்களில் பல இடங்களில் இம்மாற்றத் தினை ஏற்க முடியாத சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. கணவன் - மனைவி உறவு விரிசல், ஒட்டுதல் இல்லாத தன்மை, தாய் - பிள் ளைகள் உறவில் பாதிப்பு என்பன போன்ற சமூகமாற்ற தன்மைகள் இன்று குடும்பங்களில் பிரச்சினனகளைத் தோற்றுவிக்கின்றன.

கல்வி வளர்ச்சி சமூகத்தில் நல்ல உறவையே ஏற்படுத்த வேண் டும் குடும்பங்களில் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஒருபுறம் உயர்கல்வி கற்ற பெண்கள் உத்தியோக மோகம் காரணமாகத் தொழிற்கல்வியின் மகத்துவம் தெரியாமல் ஏற்ற துணையை பெறு வதில் சிரமம் அடைகின்றனர். திருமணமின்றியே தம் வாழ்நாளைக் கழிப்பாரும் உள்ளனர். மறுபுறம் உயர்கல்வி கற்ற ஆண்களும் தம் மளவில் கல்வி கற்காத துணையமையுமிடத்து சலிப்பு, விரக்தி இவற்

றிற்கு ஆளாகும் தன்மைகளும் உள்ளன. கல்வி வளர்ச்சி உள்ளத்தில் நிறைவைக் காணும் பண்பை வளர்க்க வேண்டும். மற்றவர்களை வழி நடத்தி நிறைவைக் காண்பதாக அமைய வேண்டும்.

கல்வி கற்ற குடும்பங்களாக அமையுமிடத்துப் பெற்றோர் அதீத ஆசை காரணமாகத் தம்மிலும் பார்க்கப் பிள்ளைகள் மேலும் கற்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டு தம் பிள்ளைகளின் ஆற்றல் சக்தி திறமைகளுக்குப் பொருந்தாத விதத்தில் பொருத்தமற்ற துறைகளில் கற்கும்படி கட்டாயப்படுத்துவதும் இதனால் திணறும் குழந்தைகள் மேலும் முன்னேற முடியாதவிடத்து ஏமாற்றமடைந்து பின் தங்குகின்றனர். சரியான எதிர்காலம் அங்கே அவர்களுக்குக் காட்டப்படவில்லை. கல்வியறிவு அற்ற பெற்ரோராயின் பலர் தம் பிள்ளைகளை வழி நடத்த முடியாமல் தம்மால் உதவ முடியவில்லையே என்று சலிப்புறுவது, ஏமாற்றமடைவதும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

அறிவானது உபயோகப் படுத்தப்பட வேண்டும். சமூகத்தை வளர்க்க வேண்டும். இவையின்றி இதை வளர்த்துக் கொண்டு போவதில் பிரயோசனம் இல்லை. குடும்பத்தின் வளர்ச்சிக்கும் சமுதாயத்தின் ஆக்கத்திற்கும் இவை பயன் படவேண்டும். கொஞ்சமே படித்திருந்தாலும் அதை நல்ல காரியங்களுக்குப் பயன் படுத்திக் கொள்ளுபவன் நிறையப் படித்திருந்தும் தான் வளர்த்துக் கொண்ட அறிவை உபயோகமாகப் பயன்படுத்திக் கொள்ளாதவனை விடச் சிறந்தவன் என சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்,

எந்த நிலையிலும் கல்வி சமூகமான வளர்ச்சிக்கு முன் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அண்மைக் காலங்களில் ஏற்பட்ட இடப் பெயர்வும், புதிய கல்வித்தளங்களும் இன்று நாமறிந்தவை. இவைகள் ஓரளவு தாக்கங்களையே ஏற்படுத்தியுள்ளன. முற்றிலும் புதிய சூழ் நிலைகளும், வசதிகள் அற்ற தன்மையும், குறுகிய காலத்தில் ஏற்பட்ட இழப்புகளும் கல்வியின் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. தமது முன்னய வசதிகளை இழந்த மாணவரும், பெற்றோரும் ஏமாற்றம் சலிப்புகளுக்குள்ளான நிலை. உரிய வழிகாட்டுதல்களினால் குறைக்கப்பட வேண்டியவையாகும்.

இன்று குடும்பங்களில் பொதுவாகக் காணப்படும் மிகப் பெரிய தாக்கம் இளைஞரின் நிச்சயமற்ற இருண்ட எதிர்காலமாகும். இவை குடும்பங்களில் பெரும் சவாலாக அமைகின்றன. சரியான பாதையில் வழிநடத்திச் செல்ல முடியாத கல்வி அமைப்பும், தரப்படுத்

தல்களும், போட்டிப் பரீட்சைகளும், பாதுகாப்பு அற்ற தன்மைகளும் இளைஞருக்கு நிச்சயமற்ற எதிர்காலத்தையே காட்டுகின்றன. இவை பெற்றோர், பிள்ளைகள் இருபகுதியினருக்குமே கஷ்டங்களைத் தோற்றுவிக்கின்றன.

இவைகளை எல்லாம் கடந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரியப்படும் மாணவராயினும் சரி அனாவசியமான கால தாமதங்களினால் பல வருடங்கள் கழிந்த பின்னரே பட்டதாரிகளாக வெளியேறுகின்றனர். எமது மண்ணில் சுமார் 25 வயதைக் கடந்த பின்னரே பட்டதாரியாக வெளியேறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு மேல் இவர்களின் பெற்றோரிலேயே தங்கி இருக்கும் நிலை கவலைக்குரியதாகும். உழைத்துக் கொண்டே கல்விகற்கும் வாய்ப்புகளும் எமது மண்ணில் குறைவு. இத்தன்மைகள் குடும்பங்களில் பாரதூர விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

குடும்பத்தில் தொழிற்கல்வியின் மகத்துவம் உணரப்பட வேண்டும். ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாத தன்மையினைப் பிள்ளைகளும் பெற்றோரும் உணர வேண்டும். சூழலுக்குத் தம்மைப் பொருத்தப்பாடுள்ளவராக மாற்றும் தன்மை எம்மவர்க்கு ஏற்படவேண்டும். பெற்றோரும் பிள்ளைகளும் தன்னம்பிக்கையினை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இருக்கும் வளங்களை பயன்படுத்தாத தன்மையினாலும், உத்தியோக மோகம் காரணமாகவும் கற்றகல்வி வாழ்வில் வளர்ச்சியை ஏற்படுத்தாமல் மந்தநிலைக்கே இட்டுச் செல்கின்றது, அண்மைக் காலங்களில் ஏற்பட்ட இடப் பெயர்வுகள், இழப்புகள் மனத் தளர்வை ஏற்படுத்தினும் அவை மேற்கொள்ளப்பட வேண்டும். இன்று இருக்கும் நெருக்கமான குடியிருப்புகளும், களியாட்ட நிகழ்வுகளும் கல்வி வளர்ச்சியினைப் பாதிக்கின்றன. தொழில் வாய்ப்புகள் அற்ற கல்வி அமைப்பு ஏற்ற தொழில்களை இளைஞருக்கு அளிக்காத காரணத்தினால் வீண் வெட்டிப் பொழுது போக்கும் இளைஞர் பரம்பரையை உருவாக்கலாம். இதனால் பல குடும்பச் சிக்கல்கள் ஏற்பட்டு அவை சமூக அழிவிற்கும் காலாக அமையலாம். எனவே சூழலுக்குப் பொருத்தமான கல்வியமைப்பும், வழிகாட்டல்களும், நல்ல துணைக் கரங்களும் இன்று அவசியமானவை. கல்வி அமைப்பு குடும்ப - சமுதாய வளர்ச்சிக்குதவ வேண்டும். இம் மாற்றங்களைச் சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாற்றங்களை ஏற்க முடியாத விடத்து அவை பிரச்சினைகளையே தோற்றுவிக்கின்றன எனலாம். ●

# வருத்தம் பாதி; வருந்துதல் மீதி

## அதிகுருதியமுக்கம்
## HYPERTENSION

— டாக்டர் செல்வி நா. நாகேஸ்வரி D.A.M.

நவீனவாழ்வில் அதிகுருதியமுக்கம் பற்றிய அச்சம் அதிகமாக உணரப்படும். இரத்தக் கொதிப்பு எனப்படுவதும் இதனையேதான். அதிகுருதியமுக்கம் என்றால் என்ன ? மனித உடல் தொழிற்பாட்டில் ஒய்வில்லாத குருதியோட்டத்தில் சுருங்கியும் விரிந்தும் இதயம் செயல்படும் போது, சாதாரணமாக எதிர்பார்க்கப்படும் குருதி அடுத்த நிலைக்கு அதிகமாகும் நிலமையே அதிகுருதியமுக்கம் எனப்படுகிறது.

### அதிகுருதி அமுக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள்

i. முதல் நிலை காரணங்கள் (Primmary Hypertension)
ii. வழி நிலை காரணங்கள் (Secondary ,, )
என வகைப்படுத்திக் கூறலாம்,

### முதல்நிலை காரணங்கள்

1. வயது
2. பரம்பரை
3. அதிகரிக்கும் உடற்பருமன் (கொலஸ்ரோல் கூடுதல்)
4. அளவுக்கு மிஞ்சிய உப்பு பாவனை
5. புகைப்பிடித்தல், புகையிலை பாவனை
(நிகொட்டின் நஞ்சு நாடியை சுருங்க செய்வதால்)
6. மிஞ்சிய மதுபாவனை (உணவு எர்பொருள் சக்தி அதிகரிப்பதால்)
7. உடற் பயிற்சியின்மை
8. மனவியல் தாக்கங்கள் (Mental stress)

வழிநிலை காரணங்கள்;

1. சிறு நீரக நோய்கள்
2. சலரோகம்
3. பிறப்பிலேயே பெருநாடியில் ஏற்படும் ஒடுக்கம்
4. கானில்லா சுரப்பிகளில் ஏற்படும் நோய்கள்
5. கருத்தடை மாத்திரைகளின் பாவனை

என இவற்றினை இனங்காணலாம்.

இந்த குணம் குறிகள் இல்லாதவிடத்து நோயை கண்டு கொள்ள முடிவதில்லை. காப்புறுதி செய்யும் வேளை அன்று அரச சேவையில் சேர்க்கையிலே தான் பலரும் இதனை கண்டு கொள்ள முடிகின்றது.

இதனைவிட தலைவலி, தலைச்சுற்று, நித்திரையின்மை, மூச்சு கஷ்டம், மார்புவலி, இரட்டைப் பார்வை, அறிவு குன்றல், பார்வை மங்கல் - இழப்பு எனவும் இதன் வெளிப்பாடுகளாகும்.

## அதிகுருதியமுக்கத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது ?

i. மருந்துகளினால் கட்டுப்படுத்துதல்
ii. மரபுவழி மருத்துவ அறிவு சொல்லும் வாழ்க்கையினால் வெற்றி கொள்ளுதல்.

அதாவது i. உப்பை குறைத்தல்
ii. அளவுக்கு மிஞ்சிய உணவை குறைத்து உடற் பருமனை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
iii. உடற் பயிற்சி
iv. மன நெருக்கடிகளை தவிர்த்தல்

**மனம் சாந்தி பெற...** உங்கள் நெருக்கடி சூழலில் இருந்து தற்காலிகமாக வேனும் ஓய்வு - உல்லாசப் பயணம் என வாழ்வின் வேகத்தை குறையுங்கள். உங்கள் மனதை அழுத்தும் பிரச்சினைகள் பற்றி - நண்பர்கள், உங்கள் அன்புக்குரியவர்களுடன் கலந்து பேசுங்கள்.

## எங்கள் சித்த வைத்திய மரபு தந்த வாழ்க்கை ஞானங்களை கைக்கொள்ளுங்கள்;

ஆமாம் i. சுவாசப் பயிற்சி
ii. சாந்தியாசனம்

iii. மந்திர உச்சாடனம்

v. தியானம் என்பன

உங்களுக்கு அமைதியை மீட்டித் தருவன.

மேலே கூறப்பட்ட நெருக்கமான நிலைகளில், ஓய்வான நேரங்களில் அமைதியான காற்றோட்டமுள்ள, குழப்பங்கள் ஏற்படாத இடத்தில் இருந்து தனிமையாக சுவாசப்பயிற்சியையோ, சாந்தியாசனத்தையோ, செய்து மனதைத் தளரச் செய்து சாந்திபெறலாம். இந்த அப்பியாசங்களில் ஓம் சாந்தி, ஓம் சாந்தி என திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் உடல் அங்கங்களை தளர்வடையச் செய்வதன் மூலம் மன அமைதி பெற்று நோயை தளர்த்தலாம்.

மந்திர உச்சாடனம் எனும் போது தமது இஸ்ட தெய்வங்களை நினைத்து மனதை ஒருமுகப்படுத்தி கடவுள் நாமத்தை திரும்பத் திரும்ப சொல்லுதல். தொடர்ச்சியாக செய்துவரல் வேண்டும். இதே போன்றுதான் ஒரு கடவுள் தோற்றத்தையோ, பெரியார்களையோ, இயற்கை காட்சிகளையோ மனதில் நினைத்து தியானம் செய்ய வேண்டும் உயர்குருதி அமுக்கம் மட்டுமல்ல; எந்த ஒரு நோயும் உங்களை நெருங்காது.

# என்னுடைய துணை எப்படி இருக்க வேண்டும்?

வால்டர் டுரோபிச் (Walter Trobisch)

1. என்னிடமுள்ள குறைகளையும் நிறைகளையும் எனக்குச் சுட்டிக்காட்டி நான் முழுமைகாண அறை கூவல் விடுக்க கூடியவராதல் வேண்டும்.

2. என்னிடத்தில் ஏமாற்றம் கண்ட போதும், என்மேல் கொண்ட நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது.

3. என்னுடைய பலவீனங்களில் நான் வெற்றிபெற சலிப்படையாமல் எனக்கு உதவ வேண்டும்.

4. நான் எப்பொழுதாவது மன வேதனைப் படுத்தியதுண்டானால் அதனை ஒளிவு மறைவின்றி எனக்குச் சொல்ல வேண்டும்.

# குடும்ப வாழ்வில் பிரச்சினைகளா? கலந்தாலோசியுங்கள்!

அருட்திரு எஸ். ஜே. இராசநாயகம்
*குடும்பவளத் துணையாளருடன் ஓர் சந்திப்பு*

*சந்தித்தவர்:* செல்வி உதயமதி
சமூகவியல் சிறப்புக்கலை (3ம் ஆண்டு)
யாழ். பல்கலைக்கழகம்

பாண்டியன் தாழ்வில் அமைந்துள்ள குடும்பவளத்துணை நிலையத்தில் ஏறக்குறைய 375 ஆட்களை திருமண - ஆயத்தப் பயிற்சி நெறியிலும் (Marriage Preparation Course), கிட்டத்தட்ட 42 தம்பதியரை திருமணவாழ்வை நிறைவாக்கும் நெறியிலும் (Marriage Enrich-ment Course), 35 - 40 தம்பதியரை குடும்ப ஆற்றுப்படுத்தலிலும் (Family Counselling), பயிற்சி கொடுக்கும் குடும்பவளத் துணையாளர் அருட்திரு எஸ் ஜே. இராஜநாயகத்தை சந்தித்தபோது திருமணம், குடும்பம் என்பனபற்றி கருத்துக்களை வழங்குகையில்...

திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் சமூகவழக்கங்களுக்கும் சமயவிதிகளுக்கும் உட்பட்டு நிலையான வாழ்க்கையை தொடங்குவதாகும். திருமணம் மூலம் குடும்ப உருவாக்கம் அமைகிறது. எல்லாச் சமூகங்களுக்கும் குடும்ப வாழ்வு அடிப்படையானது. குடும்பத்தினால் உறவு வலுப்படுகிறது. இந்த உறவை நடிபங்குகள் எடுத்து விளக்குகின்றன.

திருமணம் பின்வரும் மூன்று அடிப்படைகளில் உருவாகிறது.

i குலாசாரம் பணம் சமூக அந்தஸ்து
ii வெளித்தோற்றம்
iii நனவிலிநிலை (Uuconscious Attraetion)

குடும்பம் என்னும் பயணத்தை மேற்கொள்ளும் போது பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டிவரும். அப்பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து கலந்தாலோசித்து தீர்வு காண்பதிலேயே குடும்பவாழ்வின் வெற்றி தங்கியுள்ளது.

ஒரு சமூகத்தில் சிறு சமூகமாக குடும்பம் உள்ளது. குடும்பத்தில் ஏற்படும் ஒவ்வொரு பிரச்சினையும் அங்கத்தவரையும் பாதிக்கிறது. குடும்பத்தில் தத்தமக்குரிய எல்லைகளின் தெளிவின்மை, பெற்றோர், ஏனையவர்களின் தலையீடு, சுயமதிப்பீடற்ற நிலை, ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கையற்றதாக நடத்தல் அதாவது பிரமாணிக்கமற்ற நிலை என்பனவற்றால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குடும்ப வாழ்வில் உறவு முக்கியமானது. எல்லாவற்றுக்கும் அடிப்படையானது.

ஒருமுறை கணவனுக்கும் மனைவிக்கும் ஒருவருக்கொருவர் சந்தேகத்தினால் பிரிவு ஏற்பட்டது. வாழமுடியவில்லை, தனித் தனியே குடும்ப வளத்துணைநாடி வந்தவர்கள் தமது பிரச் சினையை ஆற்றுப்படுத்துனர் உதவியுடன் தீர்த்துக்கொண் டார்கள்.

எமது சமூகத்தில் குடும்பங்களில் ஏற்படும் பெரும்பாலான பிரச்சி னைகளுக்கு முகம் கொடுக்கவும் கலந்தாலோசிக்கவும் தம்பதிகள் முன் வருவதில்லை. உண்மையிலேயே குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினை களுக்கு முகம் கொடுப்பது குறைவு. முகம் கொடுத்து பிரச்சினைகள் பற்றி கலந்தாலோசித்து செயற்பட வேண்டும். இவ்வாறான குடும்பங் களில்தான் மகிழ்ச்சி, முன்னேற்றம் ஏற்படும்.

மேலும் சமூகக்கட்டுப்பாடுகள் பற்றிய முழுமையான அறிவின்மை யாலும் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சமூகக்கட்டுப்பாடு கள் சமூகத்தினால் சமூகம் வாழ்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை விளங்கிக் கொண்டு குடும்ப வாழ்வு அமைய வேண்டும்.

இன்றைய எமது சூழலில் புற அழுத்தங்களால் சமூக பண்பாட்டு அரசியல் மாற்றங்களால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரண மாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் மனமுடைந்த நிலையில் வாழ்வத னால், சில குடும்பங்களிலே இனங்காணப்பட்ட நோயாளியாக ஒருவர் இருப்பார். குடும்பப் பிரச்சினையில் அவரே பலிக்கடாவாக்கப்படுகிறார். இச்செயல் பரிதாபகரமானது.

எனவே எமது பண்பாட்டில் நல்லதொரு குடும்ப உருவாக்கத்திற் காக ஒவ்வொரு குடும்ப அங்கத்தவர்களும் உழைக்க வேண்டும். குடும்ப பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும், அவற்றை பரிமாற்றம் செய்ய வும், புரிந்து கொள்ளவும், விட்டுக்கொடுத்தல் வழி உறவை வளர்க்க வும் பழகிக்கொண்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும் என்றார்.

# உனக்குத்தான் மகனே!...

எதிர்கால முதலீடாய் - அன்று
பிள்ளையை வளர்த்ததால்
என்னிடம் எதுமற்று - இன்று
எங்கியே நிற்கின்றேன்.

சளைக்காமல் உழைத்தேன் - அன்று
வளர்க்க வேண்டும் பிள்ளையை என்று
சளைத்துப் போனேன் இன்று
ஆதலால் வளைந்து போனேன்.

பண்புடன் வாழவென்று படிப்பித்தேன்
பகல் இரவாய் அன்று
பார்க்க எடுக்க ஆளில்லாமல்
பரிதவிக்கின்றேன் நான் இன்று.

வெளிநாடு போகவென்று
வேண்டியதெல்லாம் கொடுத்தேன் - அன்று
வெறுங்கையுடன் இன்று
வெறுமனே நான் இங்கு.

தக்க துணை மகனுக்கென்று
தரணி எல்லாம் தேடி - அன்று
அனுப்பினேன் அருந்ததியை
ஆனாலும் நான் இன்று அநாதரவாய்,

மேல் நாடு சென்ற
மேன்மை தங்கிய மகனே!
அப்பா உயிருடன் இருக்கின்றார் - என்று
அனுப்பும் கடிதம் - என்று...?

மகாலிங்கம் உதயகுமார்.
சமூகவியல் சிறப்புக்கலை (3-ம் ஆண்டு)
யாழ். பல்கலைக்கழகம்.

# இனி எப்ப

முன்புறம் பரந்த வயல்வெளிகளையும் அருகே சிறு தென்னந்தோப்பையும் உள்ளடக்கியிருந்த அந்த வெள்ளை நிற மாடிக்கட்டிடத்தை அண்மித்தபோது நேரம் 10 மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. அந்த கட்டிடத்தின்மேல் எழுதப்பட்டிருந்த ''அன்பகம்'' சிறுவர் இல்லம் எனும் வாசகத்தை வாசித்தபடி ஒற்றையடிப் பாதையின் முடிவிலிருந்த அகன்ற வாயில் வழியாக உள்ளே நுழைந்தபோது பாடம் நடந்து கொண்டிருந்தது போலும் சிறுதொலைவில் தென்னை மரத்தின்கீழ் வட்டவடிவில் சிறுவர்கள் கதிரையில் இருந்தார்கள். ஏனைய சிறுவர்கள் முன் விறாந்தையில் தங்களைச சந்திக்க வந்தவர்களுடன் எவ்வித கூச்சமுமின்றி அவர்கள் அருகில் இருந்த வண்ணம் கதைத்தும், விளையாடியும் கொண்டிருந்த்நிலை அடிக்கடி இப்படியான சந்திப்புக்களை கண்டு பழகியவர்கள் என்பதை எனக்கு உணர்த்தியது. எல்லோரும் ஆரோக்சியத்துடனும், சுறுசுறுப்பாகவும் காணப்பட்டனர். நானும் அவர்களில் ஒருத்தியாக அங்கே போடப்பட்டிருந்த சிறு வாங்கில் அமர்ந்து விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களின் பேச்சுக்களையும் கூடவே தென்றல் மிக லேசாக வீசியதால் மரங்களில் இலைகள் அசைந்து உராய்ந்து கூட்டிய இன்ப சுருதியையும் சேர்த்து ரசித்துக்கொண்டிருந்தேன்.

''அக்கா உங்க பேரென்ன ?'' பழக்கமற்ற ஒரு குரல் பின் புறமாக இருந்து வந்ததையடுத்து திரும்பிப் பார்த்தபோது சிறுமியொருத்தி கையிலே கோணலாகக் கிழிக்கப்பட்டிருந்த வெற்றுத்தாள் பேனா சகிதம் நின்று கொண்டிருந்தாள். பெயரைச் சொன்னதும்.

''இதில எழுதிவிடுங்க'' தாளையும் பேனாவையும் என்முன் நீட்டவே வாங்கி எழுதிக்கொடுத்தேன். அதில் ஏனைய மாணவர்களது பெயர்களும் எழுதப்பட்டிருந்தது. அவளைத் தொடர்ந்து பல சிறுவர்கள் என் பெயரை தாள்களிலும், தம் கைகளிலும் எழுதிக்கொண்டார்கள். நானும் அவர்களது பெயர்களை என்கையில் எழுதவைத்தேன். சிறிது நேரத்துக்குள்ளேயே பலநாட்கள் பழகியவர்களைப்போல் கதைக்கத் தொடங்கினோம்.

---

செல்வி குயின் மேரி
சமூகவியல் சிறப்புக்கலை
(2ம் ஆண்டு)
யாழ். பல்கலைக்கழகம்

---

இந்தமுறை சமூகவியல் சமூகத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவம் அன்

# வருவீங்க..!



பகத்தில்தான் நடக்குமென முடிவெடுத்தபோது தெரியாத ஓர் இடத்துக்குப் போகப்போகிறோம் என்ற சந்தோசம் மட்டும்தான் ஏற்பட்டது.

''அடியே நாங்கதான் அங்கே போய் சமைக்க வேணுமாம்'' செய்யவிருந்த சமையல் வேலைகளைப் பற்றி முகத்தை சுளித்துக்கொண்டது உண்மைதான் - விழாவொன்றுக்குச் செல்வதைப்போல் உடையணிந்து, எம் ஆடை அலங்காரங்கள் குறித்து பகிடிவிட்டுச் சிரித்துக் கொண்டிருந்தோமே தவிர அன்பகம் எப்படியிருக்கும்? குழந்தைகள் எவ்வாறான நிலையில் இருப்பார்கள்? என்ற சிறு கற்பனைதானும் செய்யவில்லையென்பது சத்தியம்.

''இந்த சட்டையை தோய்க்கிறது கஷ்ரமே, உங்க மோதிரம் வடிவாய் இருக்கு'' என்று சிறுமி கூறியபோது என்னுள் ஆசைகள் செத்துக்கொண்டிருந்தது நிஜம்.

''கொஞ்ச நாளுக்கு முதல்தான் எங்க அம்மா சாகக்கிடந்தாங்களாம். எனக்கு வீட்ட போகணும் போல இருக்கு'' ஆதங்கப்பட்டாள் சிறுமியொருத்தி.

''அம்மா கொடுமை தாங்கஏலாம அலரிக்காய் தின்டு செத்திட்டாங்க, அப்பா இப்ப வேறு கலியாணம் செய்திருக்கிறார், அவளுக்கும் அடிக்கிறானாம். எனக்கு கணக்குத்தான் விருப்பம், அம்மா சொல்லுவா கணக்குப்படிச்சா கடை நடத்தலாம் என்டு. நான் உழைச்சு முதலில் சின்ன பெட்டிக்கடை போட்டு என்ர இரண்டு தம்பிகளையும் பெரியம்மாவையும் பாப்பேன்'' ஒருவனின் எதிர்கால இலட்சியம் இது.

---

''அவர்களது உள்ள உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள எமக்கு எக்ஸ்ரே கண்கள் இல்லைத்தான்.''

---

''எனக்கு இங்க இருக்கத்தான் விருப்பம் அப்பத்தான் நல்லாப் படிச்சி மாஸ்ரராக வரலாம்'' இது இன்னொரு சிறுவனின் எதிர்காலக் குறிக்கோள். ஒவ்வொருவரும் இங்கே வரநேர்ந்த சூழ்நிலைகளைக்கேட்டு கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. சிரமப்பட்டு அடக்கிக்கொண்டோம்.

''இதை எங்க நினைவாக வைச்சிருங்க'' எழுதிய கவிதைகள், தீட்

டிய ஓவியங்களைத் தந்தபோது பெற்றுக்கொண்டேன் மகிழ்ச்சியோடு, அவர்கள் பாடிய பாட்டுக்கள் அன்பையும் ஆதரவையும் தேடும் சோககீதங்களாகின.

''எங்களுக்காக ஒரு பாட்டுப் பாடுங்க'' கேட்டபோது பாடவே தெரியாதநான் என்னைச் சுற்றியிருந்த சிறுவர்களுக்கு மட்டும் கேட்குமாறு பாடிக்காட்டினேன்.

''எப்படியிருக்கு பாட்டு'' கேட்டேன்.

''மணியாயிருக்கு'' சொல்லிவிட்டு ஒருமாதிரியாய்ச் சிரித்தார்கள். இவர்களுடன் கதைப்பதைவிட்டு வேறுநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது சிரமமாய் இருந்தது. கனத்த இதயத்துடன் வெளியே சென்றபோது அனைவரது கவனத்தையும் ஈர்ந்துவிட்டிருந்த சிறுவன் வந்தவர்களின் கடிகாரங்களை ஆராய்ந்தான், அங்கிருந்த குருவானவரின் தோளில் உரிமையோடு சாய்ந்தான். ஐந்தே வயது நிரம்பிய அவனை பார்க்கும் போதெல்லாம் கண்ணீர் பார்வையை மறைக்கும். இவர்களுக்கு ஏன் இந்த நிலை? தாயின் மடியில் தூங்க ஆசை வந்திராதா? தந்தையின் பாசத்திற்காக ஏங்கியிருக்க மாட்டார்களா? எல்லோரும் சொல்லுகின்ற விதியின் வேலையா? படைத்தவன் இவர்களில் மட்டும் பாரபட்சம் காட்டியதன் நோக்கம்? விளங்கவில்லை எனக்கு. வேதனை தொண்டையை அடைக்க என் உள்ளத்தை அள்ளி அள்ளி அலைக்கழித்துக் கொண்டிருந்த எண்ணங்களின் பேரிரச்சலை மாணவர்களின் பாடல்கள் குளிர்ச்சியாய் அடக்கியது.

---

''உன் துயரங்களை பிறரிடம் சொல்லதே பலர் அதற்காக வருத்தப்பட மாட்டார்கள் சிலரோ அதில் மகிழ்ச்சியும் அடைவார்கள்.''

---

''மனிதன் பிறப்பதில்லை உருவாக்கப்படுகின்றான்'' என்றான் ஒரு அறிஞன். உறவுகளை இழந்து பிரிந்து நிற்கும் இச்சிறார்களுக்கு நேசக்கரம் நீட்டி அடிப்படைக் கல்வி, திறமைகளுக்கேற்ப தொழிற்பயிற்சிகளைக் கொடுத்து வழிகாட்டி வரும் இத்தகைய இல்லங்கள் இருந்திராவிட்டால் இவர்களின் முடிவு என்னவாகியிருக்கும்? நினைவே பயமுறுத்தியது. இருபக்கங்களிலும் சிறுவர்கள் உட்கார்ந்திருக்க அவர்களுடன் உணவுகளைப் பரிமாறி உண்டது மறக்கமுடியாத நேரம். இறுதியாண்டு மாணவர்கள் உரையாற்றும்போதுதான் இது அவர்களுக்கான பிரிவுபசார வைபவமல்லவா என்பதே நினைவு வந்தது.

''நீங்க போகவா போறீங்க? இப்ப போகாதீங்க பின்னேரமாய் போங்க'' சொன்னபடி என் கையைப் பிடித்துக் கொண்டிருக்க, ஒருபுறம் உதைபந்தாட்டமும், மறுபுறம் பாடல்களும் நேரத்தை நகர்த்திக் கொண்டிருந்தது. மாலை நெருங்கி-

கொண்டிருந்ததால் நாம் கிளம்ப ஆயத்தமானோம். சிறுவர்களிடம் விடைபெறச் சென்றபோது,

''இனி எப்ப வருவீங்க?'' கேட்டார்கள்.

''விரைவில் வருவோம்'' உறுதியளித்தேன். எங்களிடம் கேட்டதைப்போல் எத்தனை பேரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பார்கள்?

---

ஒரு கையைப் பிடித்துக் கொண்டு மறுகையை அசைத்து விடை கொடுத்தார்களே! அந்த முகங்கள் இனி எப்போது சிரிக்கும்? நாளை எம்மைப்போல் சிலர் வந்தாலா?

---

''உங்கள் வரவு எங்களை மகிழ்விக்கின்றது, இனி நாம் தனிமரமல்ல தோப்புக்கள்'' என்றானே ஒரு சிறுவன். அப்படியானால் எம்பிரிவு அவர்களைப் பாதிக்கும் தானே? மகிழ்ச்சியைக் கொடுத்து விட்டு அதனைத் தட்டிப் பறிப்பது போல் இராதா? அவர்களது உள்ள உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள எனக்கு எக்ஸ்ரே கண்கள் இல்லைத்தான். ஆனாலும் சோகங்களைத் தாங்கும் மனப்பக்குவத்தைப் பெற்றதுபோல் அவர்கள் முகம் காட்டவில்லையே? கூம்பிய முகத்தோடு அதே அகன்ற வாயிலில் ஒரு கையைப் பிடித்துக் கொண்டு மறுகையை அசைத்து விடை கொடுத்தார்களே! அந்த முகம் இனி எப்போது சிரிக்கும்? நாளை எம்மைப்போல் சிலர் வந்தாலா? ''அன்பகம்'' ஆழமான உறவுப் பரியாற்றத்துக்கு ஏங்கும் இடம். பிரிய மனமில்லாது நினைவுச் சுமைகளோடு புறப்பட்டேன். யாரிடமாவது பெற்ற அனுபவத்தைப்பகிர மனம் துடித்தது.

---

''உங்கள் வரவு எங்களை மகிழ்விக்கின்றது, இனி நாம் தனிமரமல்ல தோப்புக்கள்''

---

''உன் துயரங்களை பிறரிடம் சொல்லாதே; பலரி அதற்காக வருத்தப்பட மாட்டார்கள்; சிலரோ அதில் மகிழ்ச்சியும் அடைவார்கள்.'' என்ற கூற்று என்னைத் தடுத்தது. சிறுவர்களது சந்தோஷங்கள், சோர்ந்த முகம் எல்லாமே நினைவிலிருந்து அகல மறுத்தன. அடிக்கடி இவர்களைச் சந்திக்க வேண்டுமென்ற என்முடிவு உறுதியானது.

''பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட
உதவி செய்யும் கரங்கள் புனிதமானதல்லவா''

# குடும்பத்தை கெடுக்க வந்த...

★ சின்னவன் ஸ்ரீபன் அந்தரராஜ்
சமூகவியல் (1ம் ஆண்டு) யாழ் பல்கலைக்கழகம்

சமூகம் என்பது ஆண்களையும் பெண்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு அமைப்பாகும். தமிழருடைய பாரம்பரியத்திலே பெண்கள் தெய்வமாகவும், சந்ததியினரை சுமந்து தரும் உயிருட்டியாகவும், அத்துடன் உயரிய செல்வாக்குக் கொண்ட சமூக ஆதிக்கம் கொண்ட ஒரு பிரஜையாகவும் போற்றப்பட்டனர். சுருங்கக் கூறின் தாய் வழிச் சமுதாய அமைப்பு காணப்பட்டது. இதனால் பெண்கள் சொத்துக்களில் ஆதிக்கம் செலுத்தும் தன்மையுமுடையோராக கருதப்பட்டனர். ஒரு குடும்பத்தின் சொத்து பெண்களையே சார்ந்திருந்தது. இந்த வகையிலே சமூகம் இசைவாக்கம் பெற்றிருந்தது என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் பெண்களின் உடலமைப்பும், போகங்களில் ஏற்படுகின்ற சில மாற்றங்களும், மேலை நாட்டு கலை, கலாச்சார, பண்பாடுகளின் ஊடுருவலும் பெண் விட்டுக் கொடுக்கும் தன்மையை "அல்லது ஆணாதிக்க முறையை" ஒரு நாகரீகமாக அல்லது கட்டாயமானதாக மாற்றியது. இந்த அமைப்பு மாற்றத்தினால் பெண்களுக்கான சொத்துரிமை முறை ஒரு திட்டான நிலைக்கு தள்ளப்பட்டது. அதாவது ஒரு சமூகத்தின் பொருளாதாரத்தை சமூக ஏற்றத் தாழ்வை சாதியமைப்பை நிர்ணயிக்கும் கருவியாக, சமூக சீர்கேட்டு அரக்கனாக மனித மணங்களிலே சீதனம் ஆழப்பதிக்கப்பட்டது.

இதனால் சீதனம் எனும் ஊடுருவலுக்கூடாகவே சமூக சட்ட திட்டங்கள் அமைக்கப்பட்டது. அதனால் பெண்கள் அடக்கு முறைக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்று எமது சமூகத்தில் அளவிட்டு கருவியாக ஊசலாடுவது சீதனமே. இதனால் அநேக உள்ளங்கள் சீதனம் எனும் விலங்கில் அகப்பட்டு தவியாய் தவிக்கின்றன. பல பெண் பிள்ளைகளைப் பெற்றுவிட்ட தகப்பன் எப்படி என் பிள்ளைகளை கரை சேர்ப்பேன்? என்ற எக்கத்துடன் ஒரு புறம் வாழ மறுபுறத்தில் மகள் தான் வைத்த குறியிலிருந்து சற்றும் பின் வாங்காத நிலையில பிடிவாதம் செய்கின்ற போது தகப்பனுடைய நிலை பரிதாபமானதாக அமைகின்றது. மனநோய்க்கு அவர் ஆளாவதை விட

மரணம் அவரை ஆட்கொள்ளும் நிலையும் எமது சமூகத்தில் காணப் படுகின்றது.

பெண்களுடன் கூடப் பிறந்தது ஆண்பிள்ளை ஒன்று என்றால், கடன்பட்டாவது அவனை வெளி நாடு அனுப்ப முயற்சி செய்வது தாயாரே ஆவார். இம்முயற்சி மக னது முன்னேற்றத்துக்காக அல்ல தனது பெண் பிள்ளைகளை கரை சேர்க்க.

சாதியென்பது எப்படி எமது சமூ கத்தில் பின்னிப் பிணைக்கப்பட் டதோ அவ்வாறே சீதனமும் இரண் டற மக்களுடன் அடிமனதில் ஆழப் பதிந்து விட்டது.

நாம் பொதுவாக நோக்கும் போது உள் நாட்டில் முதலீடு செய்கின்ற அல்லது தொழில் செய் கின்ற மாப்பிள்ளைகளைவிட வெளி நாடுகளில் தொழில் புரியும் ஆட வருக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டுக் கொண்டு வருகின்றது. எவ்வளவோ காலமாக மறைக்கப்படும் தொகைப் பணமெல்லாம் சீதனத்தின் போதே வெளிக் கொணரப்படுகின்றது.

மனிதாபிமானமாக பரிமாறப் பட்ட சொத்துடமைகள் இன்று கட்டாயத்தின் பேரிலோ அல்லது கௌரவத்திற்காகவோ பரிமாறப் படுகின்றது. இந்த அவலநிலையை சட்ட திட்டங்கள் அமைப்பதன் மூலமோ, கட்டுப்பாடுகள் விதிப் பதன் மூலமோ அல்லது பிரச்சா ரங்கள் மூலமோ நிறுத்த முடியாது. கட்டுப்பாடுகள், சட்டங்கள், பிரச் சாரங்கள் ஒரு புறம் செயல்பட, மறுபுறத்தில் மனிதாபிமான சிந் தையும், தனி மனித தியாகங்க ளும் தலைதூக்க வேண்டும். தனி மனித தியாகங்கள் சமூகத்தில் ஊற்றெடுக்கின்ற போது தான் இலக்கை சென்றடைய முடியும்.

குறிப்பாக சொல்லப் போனால் மனித உள்ளங்களிலே மனிதாபி மானத் தன்மைகள் விதைக்கப்பட வேண்டும். அவை மனிதனுடைய அடிமனதில் உண்மையாகவே வளர வேண்டும். வளர்ந்து வெளிப்படை யான செயல் பாடுகளல்ல உணர் ஊட்டத்தினால் செயல் படுத்தப் படவேண்டும். அப்போதே மறும லர்ச்சி ஏற்படும். அப்போதுதான் சீதனம் ஒழிக்கப்படும்.

---



## நல்ல பரிசு இதோ!

உறவினர் நண்பர்களுக்கு பண்டிகை வாழ்த்துக்கூற நல்ல பரிசைத் தேர்ந்து கொள்ளுங்கள்.

**"நான்"** ஆண்டு சந்தாவை அவர்களின் விலாசமுடன் செலுத்துங்கள்.

ஓர் ஆண்டு முழுவதும் வாழ்த்து நினைவுடன் நல் அறி வூட்டும் சிந்தனையும் பகிர்ந்து கொள்ளலாம் அல்லவா?

**உங்கள் சந்தாக்களை புதுப்பிக்க மறவாதீர்கள்.**

# ஏத்தனை பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு தங்களைக் கொடுக்கிறார்கள்?

*சாந்தியக பணிப்பாளர்* திரு பி. ஏ. சி. ஆனந்தராசா
*அவர்களின்* அனுபவப்பகிர்வு

*தொகுப்பு:* செல்வி வரதகௌரி வரதராஜப்பெருமாள்
சமூகவியல் சிறப்புக்கலை (3ம் ஆண்டு)
யாழ். பல்கலைக்கழகம்

பணிப்பாளரின் அனுபவப்பகிர்வினூடாக சொந்த வாழ்வில் அவர் கண்ட மாற்றங்களிடை அவரது குடும்பம் பெற்ற மகிழ்ச்சியை அறிந்து கொண்டேன். சமூக நிறுவனங்களுடனான அவரது உறவுநிலை, புரிந்துணர்வு என்பவற்றை திறந்த மனதுடன் பகிர்ந்தமை கண்டு மகிழ்ச்சியடைந்தேன். ''ஆரம்பத்தில் நான் குறுகிய வட்டத்தினுள்ளே இருந்தமையாலும் எனது சூழலில் உள்வாங்கிய குடும்ப மாதிரிகளினாலும் (Family Models) ஆணாதிக்கரீதியாகத்தான் யோசித்தேன்.'' என்பதனை கழிவிரக்கத்துடன் பரிமாறியமை இன்றைய குடும்பங்கள் காண வேண்டிய மாற்றத்தினை உணர்த்துகிறது.

ஆரம்பத்தில் மருந்து எடுத்த சமூகத்திலிருந்து உளவளத்துணைக்கு வந்த ஒருவர் ஏன் நான் பிரச்சனையை உங்களிடம் சொல்ல வேண்டும்? என்ற வினாவுக்கான விடையாக உளவளத்துணையின் செயல் முறையினை விளங்கப்படுத்திய பின்பு உளவளத்துணை அந்தரங்கமானது ஒத்துணர்வுடன் கூடியது என்பதை புரிந்த பின்பு உளவளத்துணையைப் புகழ்ந்து சென்றார். இவ்வாறான அனுபவங்கள் பல.

குடும்ப உறவுகளின் நெருக்கீடுகளினால் தனிநபர் படும் வேதனைகள் பல அதில் ஒன்று:

காதல் திருமணத்தினால் உருவாகிய குடும்ப உறவில், பெண் பிறந்த வீட்டிலிருந்து கணவன் வீட்டில் வாழ்கின்றாள். பொருளாதார வசதியுள்ள இளம் குடும்பம். உள மருத்துவ நிலை

யத்தின் ஊடாக சாந்தியகத்திற்கு வந்தார். புரிந்துணர்வு குடும்பத்தில் இல்லை. பொறாமை, கோள்சொல்லுதல், கூடவே அப்பெண்ணைவிட மகனை நல்ல இடத்தில் கலியாணம் முடித்து வைத்திருப்பேன். இவளுடன் கஷ்டப்படுகிறான் என்ற மாமியாரின் அழுத்தம் ஒருபுறம், கணவனின் புரிந்துணர்வு இல்லாமையும் அடித்தலும் மறுபுறம், உறவுப்பிரச்சினைகளுடன் வந்தவர் உளவளத்துணை பெற்ற அனுபவம் குறிப்பிடத்தக்கது.

சமூகத்தில் குடும்ப உறவுகள் சமத்துவ நிலைக்கு இன்னும் வரவில்லை. ''கற்பு என்பது இரு கட்சிக்கும் உரித்துடையது'' என்ற பாரதியின் கூற்றினை அவர் நினைவு கொண்டார்.

> ''ஆரம்பத்தில் நான் குறுகிய வட்டத்தினுள்ளே இருந்தமையாலும் எனது சூழலில் உள்வாங்கிய குடும்பமாதிரிகளினாலும் ஆணாதிக்க ரீதியாகத்தான் யோசித்தேன்.''

அந்தரங்கமான பாலியல் பிரச்சினைகள் மிகவும் ஆழமானவையாகும். இங்கு திருப்தி, திருப்தியின்மை என்பனவே முக்கியம் பெறுகின்றன. தற்காப்புணர்ச்சி தடையை (Incest tabu) விலக்குபவர்கள் மிகவும் குறைவானவர்கள் எனினும் சமூகத்தில் இனங்காணலாம். ஆசிரியர் - மாணவர் பாலியல் பிரச்சினைகளும் இனங்காணப்படும்.

எமது சமூகத்தில் உறவு முறைகளும் தொடர்புகளும் (Relationship, Communi cation) மிகவும் குறைவாகவே உள்ளது. குடும்ப வளப்படுத்தல், திருமணமாகப் போகிறவர்களுக்கான ஆயத்தப் பயிற்சி, ஆகியவற்றின் போது நேரடியாகவே இதை ஒப்புக் கொள்கின்றனர். இதற்கு ''நேரமின்மையை'' காரணம் காட்டுவது இவற்றின் முக்கியத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே உணர்த்துகிறது. மரபு வழியான விழுமியங்களைக் கொண்ட ''நிரந்தர நடிபங்கை'' வைத்திருக்கிறார்கள், இதனாலேயே நெருங்கி உறவு கொள்வது கஷ்டமாக இருக்கின்றது. வாய்மொழி, வாய்மொழியல்லாத (Verbal, non verbal) தொடர்புகள் அவர்களுக்கு தெரிவதில்லை. இவற்றினைக் கூறும் போது ஆச்சரியப்படும் முகங்கள் பலவாகவுள்ளனர்.

இளைஞர், யுவதிகளுடன் பெற்றோர் தொடர்பு கொள்வது மிகவும் குறைவு. சென்ற வருடம் உளவளத்துணை நாடி வந்தோரில்

கட்டிளமைப் பருவத்தினரே அதிகமாக உள்ளனர். பெற்றோர் தங்களை விளங்கிக்கொள்கிறார்கள் இல்லை என்றே கூறுகிறார்கள். எமது சமூகத்தில் கல்வியினை முதலீடாகக் கருதுவதனால் பெற்றோர் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடக்கம் உயர்தர பரீட்சைவரை பிள்ளைகள் போட்டியாகப் படித்து பிரகாசிக்க வேண்டும் என்ற மனோபாவமும் எதிர்பார்ப்பும் மாணவர் மனப்பாங்குகளைப் பாதிப்பதாக உள்ளது. பரீட்சைகள் போட்டி நிறைந்தவை இதனால் வாழ்க்கையே போட்டிக் களமாக இவர்களுக்கு மாறிய நிலைப்பாட்டைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் கட்டிளமைப் பருவத்தினரிடையே தாழ்வு மனப்பாங்கு உருவாகி சுய மதிப்பீடுகள் ''எனக்குத் தகுதியில்லை'' ''ஏலாது'' என்ற வார்த்தைகளாகின்றன. சுய மதிப்பீடுகள் ஏற்படுவதற்கான அத்திவாரம் குடும்ப நிறுவனமே. குடும்பங்களில் ஏற்றுக் கொள்ளல், அன்பு செய்தல், புரிந்து கொள்ளல் என்பன அரிதாகவே உள்ளது. இதனால் பிள்ளைகளுக்கு உளம் சார்ந்த மெய்ப்பாட்டு நோய்கள் ஏற்படும். உதாரணமாக மலச்சிக்கலுக்கான காரணமாக பிள்ளை பரீட்சையில் சிறந்த புள்ளிகள் எடுக்காமையும் காரணமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

> ''பரீட்சைகள் போட்டி நிறைந்தவை. அதனால் வாழ்க்கையே போட்டிக் களமாக இவர்களுக்கு மாறிய நிலைப்பாட்டை காணக்கூடியதாக உள்ளது. இதனால் கட்டிளமைப் பருவத்தினரிடையே தாழ்வு மனப்பாங்கு உருவாகி சுய மதிப்பீடுகள் ''எனக்குத் தகுதியில்லை'' ''ஏலாது'' என்ற வார்த்தைகளாகின்றன.''

அச்சநோய் காரணமாக (Phobia) உளவளத்துணை பெற்ற யுவதி முதலில் பெற்றோருடன் வந்தார். உளவளத்துணை செயல்முறையூடாக நாற்பது அமர்வுகளின் பின் நலன் பெற்றார். இவ் யுவதி வெளிநாட்டில் திருமணமாகி வாழ்கிறார். தனது மகிழ்வான வாழ்வைத் தெரியப்படுத்தியதுடன் தந்தையைப்போன்ற சாந்தியகத்தின் பணியாளருக்கு நன்றி தெரிவிக்கும் ''வாழ்த்து மடல்'' அனுப்பிய செய்தி மறக்க முடியாததொன்றாகும்.

எமது சமூகத்தில் பெற்றோருக்குத்தான் உளவளத்துணை செய்ய வேண்டும். ஏனென்றால் அவர்களுக்குப் பிள்ளை வளர்ப்புத் தெரியாது. அன்பு, புரிந்துணர்வு, தொடர்பு கொள்ளல், உறவுமுறை என்பன கல்விக்காகத் தியாகம் செய்யப்படுகின்றது ''செல்லம் கொடுத்தால் படிக்க

மாட்டான்'' என்கின்ற எண்ணம் பிள்ளைகளை உணர்வு பூர்வமாக பாதிக்கின்றது (Emotion Cripples) பிள்ளை வளர்ப்பிலே பொருள் சார்ந்த வெகுமதிகளைவிட அன்பான ஏற்றுக் கொள்ளல் புரிந்துணர்வுடனான வார்த்தைகள் என்பன மிகுந்த பலனளிக்கின்றன. உளவளத் துணை நாடி வந்த ஒரு இளைஞனின் இதயத்திலிருந்து...

''அப்பா எல்லாம் தந்தார், ஆனால் தன்னைத் தரவில்லை'' எத்தனை பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு தங்களைக் கொடுக்கிறார்கள்?

பாடசாலைகள் சமூகமயமாக்கல் முகவர் நிலையமாகச் செயற்படுவன. ஆனால் இன்று பாடசாலைகள் போட்டியும் பாரபட்சத்தையும் உருவாக்கும் இடங்களாக இருப்பதை உளவளத்துணை நாடி வந்த மாணவர்களின் அனுபவங்கள் சான்றுபகர்கின்றன.

பிள்ளைகளைப் பொறுத்தவரையில் உளவளத்துணை பெற பெற்றோர் அல்லது ஆசிரியர்கள் ஊடாகத்தான் வரவேண்டும். பெரும்பாலும் பெற்றோர்களே அழைத்து வருகின்றனர். இந்தப் பருவத்தினருக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் பாடசாலை மட்டத்திலும், சமூக மட்டத்திலும் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்தமையால் சாந்தியகத்திலுள்ள ''மனிதம்'' ''யுனிசெவ்'' ஆகிய குழுக்கள் இதற்கு ஆர்வம் காட்டுகின்றன.

எம் சமூகத்திலே கூட்டுக்குடும்ப முறைமை உடைந்த போதிலும் குடும்பத்தை மையமாகக் கொண்ட இணைவு வலுவாக உள்ளது. இந்த இணைப்பு வலுவாக உள்ளதனால்தான் பிரிவு, இழப்பு என்று வரும்போது குடும்பத்தில் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

''சிறிய குழந்தைகளை கொண்டதான இளம் குடும்ப தலைவர் வெளிநாடு செல்லவென தீர்மானித்தார். ஆனால் குடும்பத்தினை விட்டுப்பிரிய முடியாமல் பதகளிப்பு உளச்சிக்கல் ஏற்பட்டது. உளவளத்துணை பெற்றபின் தீர்மானத்தினை மாற்றி குடும்பத்துடனேயே மகிழ்வுடன் வாழ்கிறார்''

இவ்வாறாக சமூகத்தில் குடும்ப உறவுப்பிரச்சினைகள்; குடும்ப உறவில் வன்முறை, இடம் பெயர்ந்ததால் ஏற்பட்ட பிரிவும், இழப்பும், பாடசாலை சக நண்பர்களை இழத்தலும், பிரிதலும், ஆகியன தனிநபர்களையும் குடும்பத்தினையும் பாதிக்கின்றன. குழந்தைகளில் ஏற்படும் அதிர்ச்சி பாதிப்புக்கள் பற்றி நிபுணத்துவ ஆலோசகரான Dr. D. J. சோமசுந்தரம் அவர்களின் கூற்று சமூக விழிப்புணர்வுக்கான தூண்டலாக அமைகிறது.

''சமூக பொருளாதார ரீதியாக யுத்தத்தின் விளைவுகளை பார்க்கிறோம். ஆனால் மனித மனங்கள் பற்றிய விழிப்பு

ணர்வு குறைவாகவே உள்ளது. பிள்ளைகள் இயற்கையாக உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த மாட்டார்கள். மன வடு அடிமனங்களிலே தெரியாமல் போவது மட்டுமல்ல நிரந்தரமான வடுக்களை ஏற்படுத்தும். இந்தப் போரால் நிகழ்ந்த அழிவுகளுக்கு வருங்கால சந்ததியினர் தான் சாட்சிகளாக இருப்பார்கள்"

## பிரச்சினைகளின் பரிமாணங்கள்

1993 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் மார்கழி வரை சாந்திகத்தில் உளவளத் துணை பெற்றோர் விபரம்

| விபரம் | மொ. எண் | வீதம் |
|---|---|---|
| 1. போரினால் ஏற்பட்ட அதிர்ச்சி வடுக்கள் | 67 | 20.68 |
| 2. உடல் உளவடுக்கள் | 42 | 12.96 |
| 3. தற்கொலை முயற்சியிலிருந்து தப்பியவர்கள் | 12 | 3.70 |
| 4. தீவிர நெருக்கீடுகளினால் பாதிக்கப்பட்டோர் | 07 | 2.16 |
| 5. பிரிவுப்பதகளிப்பு | 30 | 9.26 |
| 6. இழப்பு | 30 | 9.26 |
| 7. கழிவிரக்கமும் இழப்பும் | 27 | 8.33 |
| 8. கட்டிளமைப் பருவத்தினர் | 54 | 16.67 |
| 9. பிரச்சினைக்குரிய பிள்ளைகள் | 27 | 8.33 |
| 10. குடும்ப உறவுப் பிரச்சினைகள் (தனிய தம்பதியர்களாக வந்தோர்) | 17 | 5.25 |
| 11. மதுபாவனை | 11 | 3.40 |
| | 324 | |

மூலம்: 1994 ஆடி மாதம் சமூகசேவையாளர் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலிருந்து.

# அர்த்தமிழந்த உறவுகளோடு...

சூரியன் மேற்கில் அஸ்தமித்துக்கொண்டிருந்தான். நேரம் 6.00 மணியை அண்டியது. மாதமும் ஐப்பசி ஆகையால் கருமேகங்கள் ஆங்காங்கே திட்டுக் கட்டியிருந்தன. பஸ்ஸிக்காக காத்து நின்ற ஆனந்தியின் உடலை வீசிய குளிர்காற்று சில்லிட வைத்தது. கை கடிகாரத்தை பார்த்தவளின் கண்களை கண்ணீர் திரையிட்டு மறைக்க அவளது நினைவுகள் நேற்றைய நிகழ்வுகளில் லயித்துப்போயின.

ஆம் ஆனந்தியின் மேலே தான் அவளது குடும்ப பொறுப்பு சுமத்தப்பட்டிருந்தது. அவளது தந்தை விட்டுச்சென்ற நாளிலிருந்து அக்குடும்பத்துக்காக அவள் மாடு மாதிரி உழைத்துக் கொண்டிருக்கிறாள் ஆயினும் அவளது உணர்வுகளையும், செய்கைகளையும் புரிந்து கொள்ள முடியாத, தாயும் தாயின் சகோதரர்களும் தான் அவளது இன்றைய நிலைக்கு பூரண காரணமாய் இருந்தார்கள்.

நேற்றய தினம் அவள் வைத்தியாக வேலை செய்து கொண்டிருக்கும் மருத்துவ மனையில் நோயாளிகளின் வரவு அதிகமாக இருந்தது. அதனால் அவளால் நேரத்துக்கு வீடு செல்ல முடியவில்லை. அன்றைய வேலை முடிந்து அவள் ஸ்டெரஸ் கோப்பை கழற்றி வைக்கும் போது நேரம் 7.30ஐ தாண்டியிருந்தது. வேகமாக மருத்துவ மனையில் இருந்து வெளியேறியவள் நேராக பஸ்நிலையத்தை அடைந்தாள். ஆயினும் 8.00 மணி வரையும் பஸ் எதுவும் வரவில்லை. எனவே இனியும் நிற்பதில் பிரயோசனம் இல்லை என்பதை உணர்ந்தவள் நடக்க தொடங்கினாள்.

செல்வி வாணி ஆறுமுகம்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

நடந்து சென்றவளின் கண் முன்னே தாயின் உருவம் தோன்றி அச்சுறுத்திக் கொண்டிருந்தது. தாயின் எண்ணங்களுக்கு தூபமிடுவது போன்று தாய் மாமன்மாரின் செய்கைகளும் அமையும் என்பது அவள் அறிந்ததே இப்படியே வீடும் அண்மித்துவிட்டது. வீட்டு படலையைத் திறந்தவள் வாசலில் நிற்கும் தாயின் அனல் தெறிக்கும் விழிகளை பார்த்தபடியே படியேறினாள். அவள் எதிர்பார்த்தது போலவே தாய் தனது படலத்தை தொடங்கிவிட்டாள். ஆனந்தி எவ்வளவு கூறியும், அவளது தாயின் காதில் எதுவும் ஏறவில்லை அவள் தனக்கு தெரிந்தளவில் ஆனந்தியை திட்டிக்கொண்டேயிருந்தாள் அவளது தாய் கூறிய ஒரு வசனம் அவளது நெஞ்சை முள்ளாய்த்

தைத்தது "நீ உண்ட மனம்போல ஆரோடையெண்டாலும் சுத்தி போட்டு வா நான் உனக்கு அவிச்சு கொட்டிறன்'' அந்தச் சொற்கள் ஆனந்தியின் காதில் மீண்டும் மீண் டும் ஒலித்தன "அம்மா வந்து... என்று தொடங்கியவளை "மூடடி வாயை'' என்ற மாமனின் வாய் அடக்கிவிட்டது அழுதழுதே தனது வேலையைச் செய்தவள் சாப்பிடா மலே படுத்து விட்டாள்.

அவளது எண்ண ஓட்டங்களை இரைந்துகொண்டு வந்த பேருந்து கலைத்துவிட்டது. அவள் அவசர மாக வண்டியினுள் ஏறி அமர்ந்து கொள்ள வண்டி புறப்பட்டது. ஆச னத்தில் தனது தலையை சாத்திக் கொண்டவளின் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் விழுந்து தெறித்தன.

இன்றும் அதே பல்லவியை எதிர் கொள்ள வேண்டும்; என்னைப் புரிந்து கொள்ளாத — புரிந்து கொள்ள தயாராக இல்லாத ஆனால் என் மீது அதிகாரம் செலுத்த மட்டும் மிகுந்த உரிமை யோடு காத்திருக்கும் இந்த உறவு களுடனான என் வாழ்வுக்கு அர்த் தமென்ன?

அருவியாய் துளியாக விழுந்த கண்ணீர், அலைமோதும் — வண் டியிலே அழுவதற்கும் முடிவ தில்லை. நெஞ்சு கனக்க அவள், பயணம் தொடரும்.


## மாணவ மணிகளே!

*உங்கள் திறமைகளை வெளிக்கொணர வேண்டாமா? உங்கள் சிந்தனைகள் வெளிப்பட* **"நான்"** *இதோ களம் தருகிறான்.*

*மேலே தரப்பட்ட கதை போன்று உங்கள் படைப்புக் களை சுருக்கமாகவும், தெளிவாகவும் இரண்டு பக்கத்துக்கு மேற்படாமல் எழுதி, உங்கள் பாடசாலை விலாசமிட்டு அனுப்புங்கள்.*

*மாணவர்களின் எண்ணத்தில் மலர்ந்த கதை, கட்டுரை, துணுக்குகள், உண்மைச் சம்பவங்களைப் பகிர்ந்து அவர்கள் திறமைகளை வெளிப்படுத்த ஆசிரியர்களே துணை நில்லுங் கள். சிறப்பிதழை சிறப்பிக்க இன்றே எழுதி அனுப்புங்கள்.*

# வழிகாட்டும் ஆளுமை



□ ஒரு புல்லாங்குழலின் ஆலாபனை யென, சுகமான சத்திரசிகிச்சை அனுபவம் கண்ட காலாநிதி எஸ். பொன்னம்பலம் அவர்களின் மறைவு, அவர்பற்றிய ஆழமான தரிசனங்களை எம்முன் ஒளிரச் செய்யும்.

சூழ்நிலை அழுத்தங்களுக்கு பயந்து அல்லது தப்பி ஓடாத, துயருறும் மக்களுக்கான பணியே தம் வாழ்வாக கொண்ட இந்த வைத்தியன், வெறும் வைத்தியராக மட்டுமன்றி நம் சமூகத்து வைத்தியராக எங்களுக் கெல்லாம் வழிகாட்டும் ஓர் உன்னத ஆளுமையாகவே காண்கின்றோம்.

இங்கே அவரின் மாணவர் ஒருவரின் மன பதிவுகள்...

★ எஸ். சிவதாஸ்

சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு முன் சத்தத்துடன் வந்து நிற்கிறது ஒரு தள்ளுவண்டி. அதில் இரண்டுக்கும் மூன்றுக்கும் இடைப்பட்ட வயதுடைய குழந்தை ஒன்று வளர்த்தப்பட்டு கிடக்கிறது. பிளவுண்ட சொண்டையுடைய குழந்தைக்கு அதை நிவர்த்தி செய்யுமுகமாக சத்திரசிகிச்சை நடைபெற உள்ளது. குழந்தையின் தாயும் ஒரு வித பதற்றத்துடன் வாசலில் காத்து நிற்கிறாள். அன்றைய நாளுக்குரிய சத்திரசிகிச்சை நிபுணர் வாயில் பாடலை முணுமுணுத்தபடி வந்து மருண்ட விழிகளுடன் இருந்த குழந்தையை கைகளால் லாவகமாக தூக்கிச் சென்று படியில் ஏற்றியவாறு பிரதான அறையினுள் விரைந்து செல்கிறார்.

சிகிச்சை மேடையில் குழந்தையை வளர்த்திவிட்டு மயக்கமருந்து செலுத்தியபின் சிகிச்சையை தொடர்கிறார் அந்த அற்புத மனிதர்

தன் குழந்தையை அனுப்பிவிட்டு வாசலில் காத்திருந்த தாய்க்கு இவருடைய இந்த செய்கை மனநிறைவையும் நம்பிக்கையும் தருகிறது.

தன் குழந்தையை அனுப்பிவிட்டு வெளியில் காத்திருந்த தாய்க்குள் மட்டும் நம்பிக்கையிருக்கவில்லை. எங்கள் இதயங்கள் யாவற்றிலும் உறைந்து கிடந்தது அவர் மீதான நம்பிக்கை.

இந்த உண்மைச்சம்பவம் நடைபெற்ற இடம் யாழ் போதனா வைத்தியசாலை. தன் சொந்த குழந்தையைப்போல் தூக்கிச்சென்று அவசர சிகிச்சை அளித்த அந்த அற்புத மனிதர் எங்கள் வரலாற்றில் புகழ் பூத்த சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். பொன்னம்பலம்.

யாழ் மருத்துவபீடத்தின் 92ம் ஆண்டு மருத்துவவாரத்தில் நரை விழுந்த ஒளிவீசும் கண்களுடன் ஒரு மனிதர் மென்மையான ராகத்தில் புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தார் அவை அனைத்தையும் தன்னுள் ஈர்த்துக்கொண்டார். ஆயிரக்கணக்கான மக்களுக்கு சத்திர சிகிச்சை செய்த அந்த கைவிரல்கள் நயத்துடன் மூங்கில் குழலின் துவாரங்களின் மீது நாட்டியமாடியது. சாஸ்திரிய சங்கீதத்தை முழுமையாக பயின்றவர்; இசைஞானம் பெருதும் கொண்டவர் டாக்டர் பொன்னம்பலம் அவர்கள்; அவரது அயராப்பணிக்கான ஆத்ம சக்தி இந்த வாழ்வின் ஊற்றா என நாம் வியப்பதுண்டு.

மனித நேயத்துடன் வாழ்ந்து வந்த ஒரு மகத்தான மனிதர் அவர் தன் திருமணத்திற்கு கூட 3 மணிநேரம் மட்டுமே ஒதுக்கிவிட்டு அன்று மாலையே வைத்தியசாலை சென்று கடமைகளில் ஈடுபட்ட ஒரு உண்மையான சேவையாளர் அவர்.

நோய்வாய்ப்பட்டு கொழும்பில் இருந்த தனது இறுதிநாட்களில் கூட ''நான் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று வேலை செய்ய முடியாவிட்டாலும் மருத்துவ மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டும்'' என்று கூறியிருந்தவர். எங்களையெல்லாம் தன் குழந்தைகள் போல் நேசித்தவர். எங்களின் தேவைக்காகவே தன் வேலையை தொடரவிரும்பியவர். எதிர்காலத்திற்கு சிறந்த வைத்தியர்களை வழங்கவேண்டும் என இலட்சியக் கனவு கண்டவர்.

தனது அறுபத்தியாறாவது வயதிலும் மணிக்கணக்கில் சலிப்பின்றி சிகிச்சைக் கூடத்தில் பணிபுரிந்து கொண்டிருப்பார். அவரின் உற்சாகம் வயது குறைந்தும், சோம்பித்திரியும் மற்றவர்களுக்கு குற்ற உணர்வை ஏற்படுத்துவதால் அவர்களும் சுறுசுறுப்பாகிவிடுவார்கள். தனது போதனைகளுக்கூடாகவன்றி செயல்களினூடாக மற்றவர்களை வழிநடத்தியவர்

எளிமையான வாழ்வு. புகழ் வேண்டி நிற்கா கடமை, பலனை எதிர்பாராத சேவை, தனக்கு பிடிக்காதவற்றை நேர்மையுடன் எதிர்த்தல் என்பன அவரின் சிறந்த குணாம்சங்கள். அவரது நகைச்சுவையான கிண்டல்கள் உள்ளத்தைப் புண்படுத்தாத அவரின் சத்திரசிகிச்சைக்குரிய கூரிய குணப்டுத்தலுக்கான ஆயுதங்களை ஒத்தவை.

1987 இல் இந்திய இராணுவத்தின் முற்றுகையின் போது தனது மனைவி பிள்ளைகளை நல்லூர் ஆலயத்தில் விட்டுவிட்டு அவர்களைப் பிரிந்து 15 நாட்கள் தொடர்ச்சியான தாக்குதலுக்கு மத்தியில் ஆஸ்பத்திரியில் கடமையாற்றி 17 மணித்தியாளங்கள் இராணுவத்தின் வெறியாட்டத்தின் விளைவாக மலசல கூடத்தில் கழித்ததை தனது வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவமாக நினைவுகூருவார் Dr. S. பொன்னம்பலம்,

இனப்பிரச்சனை தீவிரமாக 83 இற்கு பின் எந்த ஒரு பொதுவைபவங்களிலும் விருந்துகளிலும் கலந்து கொள்ளாமல், மக்களின் இன்னல்களை தன்னளவில் உணர்ந்து வாழ்ந்தவர். இந்த மண்ணை மிக ஆழமாக நேசித்தவர். 82 ற்கு பின் 93 இல் நோய்வாய்ப்படும் வரை வடக்கை விட்டு அவர் வேறெங்கும் செனறதில்லை. மிக நெருக்கடியான காலகட்டத்தில் இரவு பகல் பாராது சேவை செய்தவர். அவர், தான் கடமையைத்தான் செய்வதாகவும் வேறொன்றும் பெரிதாக செய்துவிடவில்லை என்றும் தனது மாணவர்களுக்கு கூறுவர்.

நிகழ்காலத்தில் நோயாளிகளின் இரட்சகராக திகழ்ந்தவர் எதிர்காலத்திற்கு அவர் ஒரு சிறபி.

அவரது இழப்பு என்பது ஒரு உன்னதமான ஆளுமையொன்றின் உருவத்தின் மறைவாக இருந்தாலும் அந்த ஆளுமையின் தெறிப்பு இன்னும் பல்லாண்டுகளுக்கு பல வைத்தியர்களில் பிரகாசிக்கும் என்பது மட்டும் திண்ணம். அதனூடு டாக்டர் பொன்னம்பலம் என்றும் எம்முடன் வாழ்ந்துகொண்டிருப்பார்.

---



நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனித ஆத்மா வெளிக்கு அடிமைபோல நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக்கொண்டுதான் இருக்கும். அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.

— பாரதியார்

# முரண்பட்ட உறவால் முறிவடையும் குடும்பங்கள்

செல்வன் ச. கிருபானந்தன்
சமூகவியல் சிறப்புக்கலை (3ம் ஆண்டு)
யாழ். பல்கலைக்கழகம்

தோமஸ் [THOMAS] ஸ்னானிக்கி [ZNANICKI] ஆகிய இரு சமூகவியல் அறிஞர்கள் ''நாம்'' எனும் மனப்பான்மையுடன் இருக்கும் ஒரு குடும்பத்தில் பிரச்சினைகள் எழமாட்டாது என்றும், இந்த 'நாம்' என்ற மனப்பாங்கு 'நான்' என்ற நிலைக்கு வரும்போது தான் அக்குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றுகின்றன எனவும் விளக்குகின்றனர்.

சாதாரணமாக ஒரு தனிக்குடும்பம் கணவன், மனைவி, பிள்ளைகள் என்பவற்றைக் கொண்டதாகவோ அல்லது கணவனையும் மனைவியையும் மட்டும் கொண்டதாகவோ இருக்கலாம். இதில் ஒவ்வொருவரும் தமது குடும்ப பாத்திரத்திற்கு ஏற்ற நடிபாகங்களை தம்மையறியாமலே நிறைவேற்றி வருவர். இவ்வாறான இவர்களின் இடைவினை உறவுகளில் அவர்கள் புதிய சிந்தனைகளை, புதிய விழுமியங்களை உள்வாங்குகின்ற வேளைகளில் மாற்றம் ஏற்படலாம் அல்லது புதிய கடமைகள், பொருளாதார வளம் தேட வேற்றிடம் செல்லுதல் என்பவற்றால் குடும்ப இடைவினை குன்றலாம். இவ்வாறான நிலைப்பாடுகள் குடும்பத்தில் பிரச்சினையினைத் தோற்றுவிக்க ஏதுவாகின்றன.

திருமண எதிர்பார்ப்புக்கள் சீதனம், சாதி, மதம், சமூக அந்தஸ்து உட்பட பொருளாதார நிலை, பரஸ்பர புரிந்துணர்வின்மை, பாலியற் திருப்திப்படுத்தற் பிரச்சினை, கலை இலக்கியத் தொடர்பு சாதனங்களின் தாக்கம், அடங்கா ஆசை என்பவற்றால் குடும்பங்களில் பல பிரச்சினைகள் எழுகின்றன.

ஒரு குடும்பம் தமக்கு நன்மை பயக்கும் என்று எதிர்பார்த்து எதில் கவனம் செலுத்துகின்றதோ அதுவே அக்குடும்பத்தின் மனப்பாங்கினை வரையறை செய்யும் விதிகள் ஆகின்றன. உள்ளங்களை இணைக்கும் திருமணம் எமது சமூகத்தில் இரண்டு வகையில் நிகழுகின்றன.

[i] பெற்றோர்களால் நிச்சயிக்கப்படுகின்ற திருமணங்கள்

[ii] தாமே தமது துணைவரை தேடிக் கொள்ளுதல்

இந்த இரண்டு வகையில் இணைந்த குடும்பங்களிடையேயும் பிரச்சினைகள் எழத்தான் செய்கின்றன. இதில் பெற்றோரால் நிச்சயிக்கப்படும் குடும்பங்கள் சிலவற்றில் விரிசல் வருவதற்கு இணையும் உள்ளங்களின் மனப்பக்குவத்தை, நோக்கங்களை மதிப்பீடுசெய்யாது சீதனம், சாதி, அந்தஸ்து, மதம் என்பனவற்றை மட்டும் கருத்திற் கொண்டு பெற்றோரால் அவசரமாக திருமணம் நிச்சயிக்கப்படுவதை ஒரு முக்கிய காரணமாக குறிப்பிடலாம்.

இன்றைய நிலையில் குடும்பத்தை கணவனும் மனைவியும் சேர்ந்து பகிர்ந்து நிர்வகிப்பதை அனேக குடும்பங்களிற் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலையில் வருமானங்கள் பொறுப்பில்லாத வகைகளில் கையாளப்படும் போது குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றுகின்றன. அதாவது மதுஅருந்தல், சிகரட் போன்றவற்றுக்கு செலவு செய்தல், தேவையற்ற பண்டங்களை வாங்குதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதேவேளை அத்தியவசியமானவற்றிற்கு ஊதாரித்தனமாக நடப்பதாலும் குடும்பத்தில் பிரச்சினைகள் எழுகின்றன.

ஒரு குடும்பத்திற்குப் பரஸ்பர புரிந்துணர்வு அவசியமானது. கணவன் மனைவியரிடையே கருத்துக்கள் போதியளவில் பரிமாறப்படாமல் இருத்தல், ஒருவருக்குத் தெரியாமல் மற்றவர் சில விடையங்களை மறைத்து வைத்திருத்தல், வெற்றுக் கவர்ச்சிகள், குடும்பத்திலே ஏனையோர் கடமைகளை ஒழுங்காக செய்ய வேண்டும் என எதிர்பார்க்கும் அதேவேளை தாம் கடமையிலிருந்து விலகிநடத்தல், மனப்பாங்கு மாற்றம், இருவரிடையேயும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இல்லாதிருத்தல் பிற குடும்பத்தினருடன் தம்மை ஒப்பிட்டுப் பார்த்தல், நல்ல விடையங்களைப் பாராட்டுவதை விடுத்து குற்றம் சாட்டுவதில் முனைப்பாக இருத்தல், எதற்கு எடுத்தாலும் எதிர்மறையாக சிந்தித்தல், சந்தேகம் கொள்ளல், மதுவிற்கு அடிமையாதல் போன்றவை குடும்பஉடைவிற்கு காரணிகளாகின்றன.

ஒரு குடும்பத்திற்கு பாலியல் திருப்தி இன்றியமையாத ஒன்று. குடும்ப உறவின் மையமாக அதுவே விளங்குகின்றது. ஒருவரது பாலியற் தேவையை அறிந்து மற்றவர் நடந்து கொள்ளாமை. பாலியல் இன்பத்தில் திருப்திகாண முடியாமை, பாலியல் ரீதியான போதிய அறிவின்மை போன்ற காரணங்களால் குடும்பத்தில் உடைவுகள் ஏற்படுகின்றன,

கலை, இலக்கியம், தொடர்பு சாதனங்கள் என்பவற்றின் தாக்கத்தால் அவற்றிலே வரும் தலைவன் போல அல்லது தலைவிபோல தமது துணைவரை இலட்சிய நிலையுடன் எதிர்பார்த்திருக்கும் ஒருவருக்கு நடைமுறையில் தமது துணைவரைப் பார்க்கும் போது அதாவது முன்னைய கருத்து நிலையை பின்னைய வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஏமாற்ற உணர்வு உண்டாகின்றது. மேலும் குடும்பத்தினரிடையே இருக்கின்ற இவர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற முற்சாய்வு [PREJUDICE] எண்ணங்களும் குடும்ப உடைவிற்கு இட்டுச் செல்கின்றது.

அடிப்படைத் தேவைகள் யாவும் நிறைவேற்றப் பட்டாலும் அதிலே திருப்தி காணாது அதற்கும் மேம்பட்ட வாழ்வு கிடைக்க வேண்டும் என எதிர் பார்ப்பதாலும் குடும்பங்களிடையே பிரச்சனைகள் தோன்றுகின்றன.

எனவே குடும்பங்கள் பிரச்சனை இன்றி வாழ்வதற்கு

(i) தனது கொள்கைகள் நோக்கங்கள் என்பவற்றுக்கு ஏற்ற துணைவரை தெரிவு செய்தல் (குடும்ப வள ஆலோசனை மூலம் இது சாத்தியமாகும்)

(ii) பணக் கொடுக்கல் வாங்கல் செய்யும் முறையில் ஒருவர் மற்றவர் மேல் கொண்டுள்ள நம்பிக்கையையும், கரிசனையையும், அன்பையும் வெளிக்காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். (தேவையறிந்து செயற்படுதல்)

(iii) மற்றவரது தனித்தன்மையை இனங்கண்டு அதனைப் பேணி வளர்க்க வேண்டும். ஒருவர் மற்றவரின் தனித்தன்மையினை சிதைக்கக் கூடாது.

(iv) ஒருவரது எண்ணங்கள் சிந்தனைகளை மற்றவர் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

(v) இருவரிடையேயும் பரஸ்பரம் புரிந்துணர்வு நிலவ வேண்டும்.


(vi) ஒருவரது பலம், பலவீனம் என்பவற்றை மற்றவர் அறிந்து அவனை மதித்து, விட்டுக்கொடுத்து நடத்தல் வேண்டும்.

(vii) பாலியல் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(viii) கிடைக்கும் வாழ்வில் திருப்திகாணும் மனப்பாங்கு இருத்தல் வேண்டும்.

இவை போன்ற அம்சங்கள் முரண்பாட்டை தவிர்க்க உதவுவனவாகும்.

# சொல்லாட்சி - 3




முடிவுத் திகதி
20-12-1994

இடமிருந்து வலம்→

1. மனித வாழ்விலே குடும்ப வாழ்வு——

4. முதுமையில் தனிமை——

5. போர்க்காலச் சூழ் நிலையால் பாதிப்படைந்து தடுமாறும் உள்ளங் கட்கு—— சிறந்த மருத்துவன்.

6. அன்று கூட்டுக் குடும்ப வாழ் வில் —— இயல்பாக இனிதாகக் கழிந்தது

8. அந்த நேசக் ——என்னை அழைக்கின்றது ஆனால் மாறிவிட் டது.

10. இதைத்தவிர்க்க இளம் தலை முறையினருக்கும் வயோதிபருக்கும் —— பரியங்கள் கலாச்சாரத்தைக் கற்பித்தல் வேண்டும்.

11. —— குழந்தைகளின் நல் வாழ்வோடு தொடர்பு பட்டது.

12. எந்த வெற்றியிலும்——யிலும் குடும்பத்தலைவியின் பங்கு உள் ளது.

மேலிருந்து கீழ் ↓

1. எப்போது தலைவலி ஏற்படு கின்றதோ அப்போது மனிதனின் —— குறைகின்றது

2. உலகெல்லாம் தமிழ்த்தூது சென்ற அடிகளார்,

3 நாளை உனையிழக்க நேருமோ வென்றேன் உள்ளம்—— அஞ்சும்

6 திருக்குறளுக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு

7 வட்டத்தின் நிலையான புள்ளி

9 கடந்த —— ஆண்குழந்தை ஒன்று கழுத்து நெரித்துக் கொல் ப்பட்டது அதுகுழம்பிவிட்டது

★ கிறிட்ட இடச்சொற்கள் ஆனி — புரட்டாசி நாணிதழில் உள்ளன.

# சினமே! வாரதே!

சினமே! கிட்ட வாராதே
மனதிற் குகந்தவர்களை
எட்டச் செல்ல வைக்காதே

இதயமே! அதை
இருத்தி வைக்காதே
எல்லோரும் எனை வெறுக்க
வைப்பதை வைக்காதே

சினமே! குருதியை
கொதிக்க வைக்காதே
நான் நிலந்தனில்.
நெடுங் காலம் வாழ வேண்டும்
கொதிக்க வைக்காதே

உள்ளமே! அதை
உட்கார விடாதே
உன் சிந்தைக்குகந்தவரை
துரத்தி வை — அதை
உட்கார விடாதே.

சினமே! குடும்பங்களை
குலைத்து விடாதே
அவர்களின்...
மகிழ்ச்சி மாளிகையை
சிதைத்து விடாதே.

சினமே! கிட்ட வாராதே
மனதிற்குகந்த வர்களை
எட்டச் செல்ல வைக்காதே.

● மீசாலையூர் கமலா.

சொல்லாட்சி 2 விடைகள்

இடமிருந்து வலம்:- 1) சர்வதிகாரம் 4) அறுவடை 5) கயமை 7) கரி
9) மாகோ 10) மன அழுத்தம் 12) இரவம் 13) புதையல்

மேலிருந்து கீழ்:- 1) சந்தேகம் 2) வறுமை 3) அகதி 6) சகோதரன்
8) மரியாதை 9) மாத்திரை 11) அம்பு

அதிர்ஸ்டசாலி: திருமதி ஜெ. மேரிராணி
''ஆலய வாசல்'' லிகோரி வீதி, சாவகச்சேரி

# கண்கள் உறங்கவில்லை

❑ அ. செ. மு. என தமிழ் இலக்கிய உலகில் அறியப் பட்ட ஈழத்து சிறுகதை முதல்வர்களில் ஒருவரான **அ. செ. முருகானந்தன்** அவர்களை ஒரு நீண்ட இடை வெளிக்குப்பின் இந்தச் சிறுகதையில் சந்திக்கிறீர்கள்.

**டபார்**.. என்று செவிடுபட அதிர்ந்ததொரு வெடி ஓசை என் சிந்தனையைக் கலைக்கிறது. வீதி வழி ஆரவாரம், அமளி, துமளி எல்லாம் ஒரு நிமிடம் நின்று போய்விட ''அது, வேறொன்று மில்லை சைக்கில்டயர் வெடித்து காற்றுப் போய் விட்டது. அது தான்'' என்று உடனடியான புலன் விச்சாரணை அறிக்கை சமர்ப் பணம் ஆனமட்டில், தெரு மீள உயிர்ப்பு எய்தி வீதி வழி போக்கு வரவு தொடர்ந்தது.

சற்று முன்னதாகத்தான் குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்த இராச குமாரனது பிராணி அது குஞ்சரமோ, குதிரையோ, அல் லது நேச பாசத்துக்குரிய குஞ்ச ரக்குதிரையோ, நொடிக்குள்ளே அதன் ஒரு கால் வலுவிழந்து கழுதைச் சுமையாகிப் போய்விட, அதனை மெல்லத் தடவித் தூக் கிச் சுமக்கும் பாதசாரியாக என் முன்னே தோன்றினார்.

''என்ன தம்பிராசா, வாகன சுகம் நொண்டிச் சிந்து பாடுகி றதா? தெருவோரம் ஒதுங்கி, மெல்ல மெதுவாய் ஒரு கைத் தாங்கலாய் சைக்கிளைத் தள்ளி உருட்டிக் கொண்டு, வந்த வழி மீள அடி எடுத்து வைத்து நடை முடுக்கியவரை வினவி, குரல் கொடுத்து வரவேற்றேன்.

''ஆர் இது எங்கட தாத்தாவா இங்கேயா இருக்கிறிய? போகும் பொழுதே பார்த்தேன். சைக் கிள்களை எண்ணிக் கனக்கிட்டுக் கொண்டு நின்றாற் போல, கடும் சிந்தனையில் ஆழ்ந்து மரமாகி வேரூன்றிப் போனீர்கள். அத னால் என் கை அசைப்பை கவ னிக்கவில்லைப் போல.''

''அவசர காரியமாக யாழ்ப்பா ணம் போய்கொண்டிருந்தேன். டயர் வெடித்து காற்றுப்போய் விட்டுது. அதைச் சரி பார்த்துக் கொண்டு உடனே திரும்பி யாழ்ப்

பாணம் போக வேணும். நாளை ஒரு கல்யாண முகூர்த்த காரியம் டி.வி படம் பிடிப்புக்கு ஒழுங்கு செய்ய வேணும். நாள் நேரம் தப்பாமல் செயல்பட்டு முடிக்க வேணும். அப்புவையும் பார்க்க வேணும் தாத்தா.''

''அப்பு எங்கே இருக்கிறார்?''

''அவரை இங்கே கொழும்புத் துறையில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் கொண்டுபோய் விட்டிருக்கு. உங்களுக்கு அந்த சங்கதி ஒன்றும்தெரியாது போல ? ஆவணியில் ஆமி ஊருக்குள் நுழைந்த கெடுபிடியில் அன்று நாங்க எல்லோரும் ஓடித்தப்பி விட, ஏலாப்பாய் படுக்கையில் கிடந்த அப்பு அவங்களிடம் சிக்கிக் கொண்டார்.''

நடவும், நானும் கூட வாறன். எங்க ஊர்ப்பக்க சேதி ஒண்டும் இல்லையே...

ஏன் இல்லை ? எல்லாச் சனமும் இந்தப் பக்கமாய்தான் வந்து அடைஞ்சு கிடக்குதுகள். ஒரு தொகுதி ஊர்களை நாட்டில் இன்னொரு பகுதி தாங்குது. ஊர்ப் பக்கம் ஒரு காக்கை குருவி கூடப் பறக்கேல்லை. வரும் வழியாக தெருவோரம் நூறு இருநூறு பேருக்கும் குறையாத தரிசனம் ஆவணியிலதொட்ட மனக்கலக்கம் இன்னும் அவர்கள் முகத்தில நிதர்சனமாகத் தோன்றுது. இந்தச் சமூக மாற்றத்தை அந்த முகங்களே காட்டுது.''

''எட்ட நடவுங்க சைக்கில் வைத்தியரிடம் தானே போகிறீர். ?''

''ஓம் தாத்தா அந்தாளும் எங்களைப் போலத்தான், எல்லாம் போட்டது போட்டபடி விட்டிட்டு ஓடியாந்திட்டார். ஆனாலும் வல்லமையாக சைக்கிள் கடை திறந்து எப்படியோ தொழிலைத் தொடர்ந்து நடத்துகிறார்.''

''அப்பரை ஆமிக்காரர் எப்படி வெளியே போக விட்டாங்கள் தம்பிராசா''

''பெரும் நோய் துன்பத்தோட இரண்டு மாதம் மட்டில இருந்து விட்டு செஞ்சிலுவைச் சங்கத்தார் மூலமா பெரியாஸ்பத்திரியில சிகிச்சையுமா இருக்க, நாங்கள் இருக்கும் இடம் தேடி எங்களிட்ட சேர்த்தாங்க. நாங்க அங்கயிங்க அலையேக்க அவரையும் என்ன செய்கிறதெண்டு தான் கொழும்புத்துறையில அந்த முதியோர் இல்லத்தில சேர்த்தம் தனிமை அதனால் மனச் சஞ்சலமானாலும் அங்க சுகமா இருக்கிறார் சூசையப்பர் யேசுநாதரின் வளர்ப்பு தந்தையாம் அதனாலோ என்னவோ அந்த பெயரை கொண்ட முதியோர் இல்லத்தில் பணிபுரியிற எல்லோருக்கும் அங்குள்ள அப்புமார் எல்லோருமே அப்பாமார்தான். தங்கள் சொந்தத் தகப்பன்மாருக்கு அன்புப்பணி புரிவதுபோல தம் மனங் கோணாமல் மெய் வருத்

தம் பாராமல் நாள் பூராவும் மனம், மெய், வாக்காக பாடு படுகிறார்கள். இதை நினைக்க சொந்தபந்த உறவுகளை எண்ணி ஏக்கந்தான்.''

''வயதான காலம் குழந்தை குஞ்சுகளுக்கு மேல் அவர்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பாக்க வேணும். நீ சொல்லுற மாதிரி முதியோர் பராமரிப்பு தரும் இல்லங்கள் இல்லையெண்டால் இண்டைக்கெல்லாம்அதுநம் ஆட்களுக்கு மேலதிக தலைவலியும் துன்பமும் பெரும்பாடாய்ப் போயிருக்கும்.''

ஊர்ச் சந்திவரை தம்பிராசா சைக்கில் வைத்தியரை அணுகி, தமது அவசர தேவையை முன் வைக்க, நம்மூர்க்காரரான வைத்திய நாதகுகனும் படகு அக்கரை சேர சமயோபகாரம் வழங்குவதற்கு சித்தமானார்.

சைக்கில் குதிரையைத் தலை கீழாகக் திருப்பி கிடத்தி விட்டு ஊனமுற்ற அதன் ஒருகாலுக்கு லாடன் பதிக்கும் ரிப்பேர் வேலை ஒரு அரை மணிப் பொழுதில் நடந்தேறியது. நோய் நாடி, நோயின் முதல் நாடி, காற்றுப் போகும் ஊசி முனை ஓட்டையைத்தேடி, நிதானித்து, அதற்கு ஒட்டுக் காப்பு போட்டு, அதற்கு மேல் புதிதாக உட்புகும் காற்று வெளியே ஓடி ஒழுகாதபடி காப்புறுதி சரிபார்த்து சைக்கில் வைத்தியர் தன் பணியை கச்சிதமாக முடித்துக் கொடுத்துவிட்டார். ''இனி எந்தத் தில்லிக்கும் பயமில்லாமல் சவாரி போகலாம் இன்னொருக்கால் உன்னை இந்தக் குதிரை உதைத்துத் தள்ளாது'' என நல்வாக்கும் மொழிந்தார்.

வலுவிழந்த ஒற்றைக்கால் செயல்பாடர்னாலும் கையசையத் தொடங்க, வெற்றிலை புகையிலை குதப்பலுடனே வாயுமசைத்து நம்முப்பேரினதும் கலந்துரையாடலுக்கு உளமார்ந்த ஈடுபாடாக பெருமளவு உதவினார்.

''இந்த வழியாக தினமும் போய் வருகிற ஆட்கள் நம்மூர்க்காரரெண்டால் ஒருக்கா வைத்தியண்ணைக் கடை வாசலில் இறங்கி ஏறாமலா போவார்கள்? இடம் விட்டு இடம் பெயர்ந்த பிறகுதான் இருந்த இடத்தின்ர அருமையே தெரியிது. ஆனா இதில ஒரு புது அனுபவம் என்னவென்றால் புது உறவுகள் சந்திச்சு அவையளோட வாழ எங்களையே மாத்திப்போட்டுது.''

''தம்பிராசா அறியாத ஊர்ப் புதினமோ, அல்லது தாத்தா தெரிந்திருக்காத நாட்டு நடப்போ எங்கள் மூண்டு பேருக்கும் தெரிந்திருக்கிறது அம்மட்டுந்தான் அவர்களது ஊர் உறவும். இந்த நாள் மட்டில் ஆர் ஒருவர் நேரில் போய் பார்த்தார்கள்? பார்க்கத்தான் துணிவேது? எங்களூர் வெற்றிலையின் சுவையை மறந்தது போல, எங்களூர்த் தண்ணீரையும் காற்றையும் மனம் மெல்ல மெல்ல மறந்து போகிறது. தரைமட்ட

மானதும், தவிடுபொடியானதும் பற்றி ஊர்ப்பேச்சாக சில சமயம் காதில் விழும்'' என முணுமுணுத்தார் வைத்தியண்ணை. தம்பிராசா சைக்கிளில் மீள ஏறி குந்திய போது .....

''இந்த ஆட்டம் ஓட்டம் அக்கிரமத் தாண்டவம் இன்னும் எத்தனை நாளைக்கு என்று அதையும்தான் பொறுத்திருந்து பார்ப்போமே என்ன தாத்தா?''

''ஓமோம் 'ஓடம் வண்டி ஏறும் வண்டி ஓடம் ஏறும், அதுமாதிரி எவ்வளவோ நடக்குது. நடந்தது எங்கட தமிழ் ஆட்களுக்கு இதெல்லாம் ஒன்றும் மாறுபாடாக விடிந்த புதுவாழ் மானம் அல்ல, இது காலவரை எத்தனை கடல் பெருக்கு சம்பவித்து நாடு பெரிய தேசம் எவ்வளவு சமுத்திரத்தில ஆழ்ந்து மறைந்து போச்சு, பெரு மழை, காற்று, வெள்ளம், சூறா வழி காலம் காலமாக வந்த போதும் பனைமரங்களை போல அசைந்தோமா நாம்.

எதிலும் நம்பிக்கை இழக்காத வாழ்வு மெத்த கிட்டத்தில மறு வாழ்வா பிரகாசிக்கும்'' என்ற வார்த்தைகளுடன் அகதிமுகாமை அடைந்த போது ''தம்பிராசா இன்றைக்கு உங்களை சந்தித்துப் பேசிய மகிழ்ச்சியில் அந்த நம்பிக்கை துளிர் விடுகிறது. என் ஓலைக்குடிசைக் கூரைமீது சேவல் ஒன்று ஏறி நின்று சிறகடித்துக் கூவி அழைப்பதைக் காது குளிரக் கேட்கிறேன்.''

அன்றைய ஒரு பொழுது சந்திப்பும் வளர்ந்த பேச்சுறவும் தெரிந்து கொண்ட ஊர்ப்புதினமும் மனதை பற்றிக்கொள்ள என் கண்கள் உறங்கவில்லை.

'கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்ப, தண்ணார்ந்த தாரகைகள் ஒளி மழுங்கித் தாமகல...'

எங்கேயோ திருவெம்பாவைப் பாடல்கள்! ஓ! பொழுது விடிகிறதா?

சமுத்திரம் தான் அலையடித்துக் கொந்தளிக்குமா? நம் நெஞ்சம் கூடத்தான்.

---

## "நான்" எழுத்தாளர் பயிற்சிப் பட்டறை.

புதிய எழுத்தாளரை வழிப்படுத்தும் எழுத்துப் பயிற்சிப் பட்டறை ஒன்றை "நான்" பயிற்சிக் குழுவினர் நடாத்த விருப்பதால் இப் பயிற்சியில் பங்கு கொள்ள விரும்புவோர் தங்கள் விபரங்களுடன் எழுத்துலகில் உள்ள ஆர்வங்களை விபரமாக எழுதி விண்ணப்பங்களை எதிர் வரும் 15-12-94க்கு முன் அனுப்பிவையுங்கள்.

பயிற்சிக்கான திகதியும் இடமும் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.

# கருத்துக் குவியல் - 68



எங்கள் சமுகத்தில்
குடும்ப நிறுவனத்தின்
சிறப்பான செயற்பாட்டிற்கு
உகந்த அமைப்பு

## தனிக்குடும்பமா?
## கூட்டுக்குடும்பமா??

**தனிக்குடும்பமே!**

ஒரு குடும்பம் சமுதாயத்தில் வெற்றிபெற்ற குடும்பமாக, ஆட்சியுடைய குடும்பமாக விளங்க வேண்டுமானால் சாதாரண நடைமுறைச் சாத்தியப்படி தனிக் குடும்பமாகவே இருக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

கூட்டுக் குடும்பமானது முன்னொரு காலத்தில் ஓர் சிறந்த அமைப்பாக கருதப்பட்டது. அதாவது பல அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமானது அந்த அங்கத்தவர்கள் திருமணமாகிப் பின் குழந்தைகளைப் பெற்ற பின்பும் ஒரே இடத்தில் நிலைத்து எல்லா அங்கத்தவர்களும் சேர்ந்து ஒரே தொழிலையே செய்து லாப நட்டத்தை சமமாக பகிர்ந்து வாழும் நடைமுறை அன்று காணப்பட்டது. உதாரணமாக விவசாயம், மீன்பிடித் தொழில் களைக் குறிப்பிடலாம்.

இன்று வெவ்வேறு தொழில் செய்வோர் கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் அடக்கப்படும் நிலைமையில் பொருளாதார ரீதியான தாழ்வுகள் உளநெருக்கடிகளுக்காளாக வாய்ப்புண்டு.

மேலும் ஒரு குடும்பத் தலைவன் பிறர் தலையீடு இன்றி தனது நிர்வாகத்தை செவ்வனே செய்ய தனிக் குடும்பம் வழிவிடுகிறது. குடும்ப இரகசியம் பேணப்படுகிறது; பிரச்சினை அல்லது செயல் திட்டம் ஒரு குடும்பத்திற்கு உள்ளேயே தீர்க்கப்பட தனிக் குடும்பம் வழிசெய்கிறது.

இதெல்லாவற்றிற்கும் மேலாக உறவுகள் நிலைப்பதற்கு ஏதுவாகிறது ஏனென்றால் கூட்டுக் குடும்பமாக இருக்கும் போது பல்வகையான பிரச்சனைகளால் உறவுப் பிரிவுகள் ஏற்படலாம்.

— **அபர்ணா பாலன்**

## தனிக்குடும்பம் தான்

எமது சமூகத்திற்கு கூட்டுக் குடும்பத்தினின்றும் தனிக் குடும்பம்தான் சிறப்பாக அமைகின்றது. ஏனென்றால் கூட்டுக் குடும்பத்தில் தனிக் குடும்பத்தை விட அதிக செலவினங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. உதாரணமாக ஒரு சகோதரனின் மனைவி ஒரு பொருளைப் புதிதாக வாங்கினால் அக் குடும்பத்திலுள்ள மற்றச் சகோதரரின் மனைவியும் அதே போன்று தனக்கும் வேண்டுமென்றும் கூறுவார் இதனால் கணவன் மனைவியரிடையே வீண் வாக்கு வாதங்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும். ஆனால் தனிக் குடும்பமாக வாழும் போது அநாவசியச் செலவுகள் தவிர்க்கப்படுகிறது. மேலும் கூட்டுக் குடும்பத்தில் வேலைக்குச் செல்லும் குடும்பப் பெண்கள் இருப்பின் அவர்கள் வீட்டு வேலைகளில் பங்கெடுப்பது குறைவாகவே இருக்கும் இதனால் வீட்டுவேலைகளிலீடுபடும் பெண்களிடம் ஓர் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதன்மூலம் குடும்பத்தில் சிக்கல்கள் தோன்றும். முதியவர்கள் சிறுவர்களைப் பராமரிப்பதில் யார் அவர்களை கவனிப்பது என்பதிலும் சிக்கல்கள் ஏற்படும். ஆனால் தனிக் குடும்பங்களிடையே இப் பிரச்சினை தோன்றாது. ஏனென்றால் குடும்பப் பெண் தனது பிள்ளைகளையும் கணவனையும் மட்டுமே பராமரிக்க வேண்டியிருப்பதால் அதை மனநிறைவுடன் செய்வாள்.

கூட்டுக் குடும்பங்களில் மாமி, மருமகள், மச்சான்மார்களிடையே கட்டாயம் ஏதோ ஒரு வகையில் சச்சரவுகள் தோன்றியே தீரும். இதனால் வீட்டிலுள்ள அனைவரும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படுவர். அத்துடன் வீட்டிற்கு மருமகளாக வந்த எல்லோரும் ஒரே தரத்திலிருப்பவர்களில்லை. சிலர் செல்வந்தக்குடியிலிருந்து வந்தவர்களாகவிருப்பர், சிலர் கல்வியிற் சிறந்தவர்களாகவிருப்பர், சிலர் சாதாரண தரக் குடும்பத்துப் பெண்களாக இருப்பர். இதனால் இவர்களிடையே தகுதி வேறுபாடுகள் காரணமாக பிணக்குகள் தோன்றும். சாதாரண குடும்பத் தரப் பெண்ணைவிட மற்றைய இரு தரத்தினரும் ஒருவித செருக்குடன் மற்றவர்கள் தமக்குக் கீழ்நிலையில்தான் என்று எண்ணி தம்மை அக் குடும்பத்தின் முதன்மையானவர்களாக நிலை நாட்ட முயல்வர். இதைவிட சில குடும்பங்கள் கூட்டமாக வாழும் போது அக்குடும்பத்திலுள்ள ஒரு பெண் தனது கணவனைவிட வேறு ஓர் ஆணுடன் கதைத்தால் அவர்களிடையே வீண் சந்தேகங்கள் ஏற்பட்டு குடும்ப பிரிவுகள் தோன்றலாம். இதே போல் அக்குடும்பத்திலுள்ள திருமணமான ஆண் அங்குள்ள பெண்களுடன் கதைத்தாலும் மேற்கூறிய நிலையே தோன்றும்.

இரவு வேளைகளில் குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் ஒன்றா

கக் கூடுவதால் பலவிதமான கதைகளையும் கதைப்பர். இதனால் இளம் பிள்ளைகள் பாதிப்படைவதோடு அவர்கள் ஒழுங்காக இருந்து படிக்கவும் முடியாமலுள்ளது. தனிக் குடும்பம் என்னும் போது குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இப் பிரச்சினை ஏற்படாது. ஒன்றாக இருக்கும் போது சிறு பிள்ளைகளிடையே பிணக்குகள் தோன்றும் இப் பிணக்குகளைத் தீர்த்துவைக்க பெரியோர்கள் முற்படும்போது சிறு பிரச்சினைகள் பெரிது படுத்தப்பட்டு அப்பிரச்சினையால் சகலரும் பாதிப்படைவர் பெரும்பாலும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் குற்றம் செய்தாலும் அவர்களை மற்றவர்கள் தண்டிப்பதை விரும்புவதில்லை.

கூட்டாக இயங்கும் போது ஒருவரிடம் வரும் விருந்தினரை இன்னொருவருக்குப் பிடிக்காதென்றால் அவரை அவமரியாதை செய்ய முற்படுவர். இதனால் வீண் மன தாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டாகும் ஆனால் தனிக் குடும்பங்களில் இத்தகைய பூசல்கள் ஏற்படாது. ஏனெனில் அங்கு ஒரு குடும்பமே இருப்பதால் இத்தகைய விருப்பு வெறுப்புக்கள் தோன்றாது.

பொதுவான ஓர் முடிவை எடுக்கும் போது கூட்டுக் குடும்பத்தில் பலர் இருப்பதால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை முன்வைத்து தமக்குச் சாதகமான தீர்வையே எதிர்பார்ப்பர். ஒவ்வொருவரும் வித்தியாசமான கருத்துக்களை முன்வைப்பதால் ஒரு செயற்பாட்டுக்குரிய முடிவை எடுப்பதில் கால தாமதங்கள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டே தீரும். ஓர் தீர்வை முன்வைக்கும் போது அக்குடும்பத்திலுள்ள அனைவருக்கும் பங்கம் ஏற்படாத வகையில் அம்முடிவு இருத்தல் வேண்டும். இதனால் இங்கு தனி மனித சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது. ஆனால் தனிக் குடும்பங்களில் கணவன் மனைவி ஆகிய இருவருமே ஒரு முடிவை எடுப்பதால் இத்தகைய சிக்கல்கள் தவிர்க்கப்படும்.

**க. முகுந்தன்**
சமூகவியல் முதலாம் ஆண்டு
யாழ் பல்கலைக் கழகம்

## கூட்டுக்குடும்பமே!

அழகான குடும்பம் அன்புறவால் இணைந்து அமைதியான செழிப்பான வாழ்க்கை வாழ்வதற்கு கூட்டுக் குடும்பமே சிறந்ததாகும். இவ்வாறு கூட்டுக்குடும்பவாழ்வில் கணவன், மனைவி, பிள்ளைகள், முதியோர், உறவினர் ஆகியோரின் இனைப்புக்கள் நெருக்கமாக அமைந்து இருக்கும். இதனால் வாழ்வில் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து பிரச்சனைகளை எதிர்கொண்டு வாழமுடியும்.

கூட்டுக் குடும்பத்தில் முதியோராக இருப்பவரிடம் இருந்து நிறை

யவே குடும்பத்தில் மகிழ்ச்சி நில வும். சிறுபிள்ளைகளை குளிப் பாட்டல், அவர்களைபாடசாலை அழைத்துச் செல்லல், பிள்ளைக ளுடன் இணைந்து விளையாடி மகிழ்ச்சிபடுத்தல், அவர்களுடைய வீட்டுப் பாடங்களை சொல்லிக் கொடுத்தல்மூலம் சிறுபிள்ளைகள் முதியோரிடம் அளவுகடந்த அன் பைவைப்பர். அத்தோடு முதி யோருக்கும் பொழுது போவதும் தெரியாது. தனிக்குடும்ப வாழ் வில் தனிமையே நிறைய நிலவுதால் வாழ்வில் வெறுப்பு ஏற்படுவது தவிர்கக் முடியாததாகிவிடும். கூட்டு குடும்பத்தில் பிள்ளை களின் ஆடல் பாடல் அவர்கள் செய்யும் அபிநயங்கள் ஒரு திருப் தியை ஏற்படுத்தும்-

**ம. குறிஞ்சிக்குமரன்**
முள்ளியவளை
முல்லைத்தீவு

## கூட்டுக்குடும்பம் தான்!

**எ**ங்கள் சமூகத்தில் குடும்ப நிறுவனத்தின் சிறப்பான செயற் பாட்டுக்கு உகந்த அமைப்பு கூட் டுக் குடும்ப அமைப்பு முறையே (Joint Family System) ஆகும்.

கூட்டுக் குடும்பம் என்பது ஒரு மூத்த - அநுபவமிக்க தலைவரின் நிர்வகிப்பின் கீழ், உறவில் நெருக் கமான பல குடும்பங்கள், பொரு ளாதாரம் உட்பட எல்லா விட யங்களிலும் ஒன்றிணைந்து தமது வாழ்க்கையை நடாத்துவதாகும்.

குடும்பங்கள் ஒவ்வொன்றும் தனித் தீவுகளாக ஒதுங்கி — குறு கிய வட்டங்களுக்குள் தம்மைச் சிறைப்படுத்திக் கொண்டு—தமக் கிடையே தடுப்புச் சுவர்களை எழுப்பிக் கொண்டு வாழாமல், ஒருவருக்கொருவர் அன்பாகவும் உதவிகரமாகவும் வாழ்வதன் மூலம் அவர் தம் வாழ்வு நிச்ச யம் சிறப்புறும். ''கூடி வாழ்ந் தால் கோடி நன்மை'' என்பது அனுபவ மொழியல்லவா ?

கூட்டுக் குடும்பமானது அதன் அங்கத்தினர்களுக்கு உயர்ந்த மனி தப் பண்புகள் பலவற்றைக் கற் றுத் தருகிறது. தனிமரம் தோப் பாகாது. அதுபோலவே தனிக் குடித்தனமும் ஒரு பூரணமான குடும்பமாக முடியாது.

கூட்டுக் குடும்பத்தில் வாழும் சிறுவர்கள் எண்ணிறைந்த நன் மைகளை அநுபவிக்க முடிகிறது. பிறருடன் அன்பாக — மரியாதை யாக வாழ அவர்கள் பழகுகிறார் கள் கீழ்ப்படிவு, ஒழுக்கம் என்ப வற்றையும் கற்றுக் கொள்ளுகி றார்கள், மூத்தோர் — முதியோ ரின் நல்லாசிகளும் வழிகாட்டல் களும் சிறுவர்களுக்குக் கிடைப்ப தும் இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்பில் தான். பாடசாலைப் பாடங்களைக் கற்பதில் சிறார்க ளுக்கு வீட்டிலிருப்போர் உதவு வார்கள். அதுமாத்திரமன்றி, சிறந்த பராமரிப்பும், கண்காணிப் பும், சிறந்த வளர்ப்புச் சூழலும் கூட சிறுவர்களுக்குக் கூட்டுக்

குடும்ப அமைப்பில் வாய்க்கிறது. இதன்மூலம் நாளைய தலைவர்களாக மலரவிருக்கும் இந்த இளம் குருத்துகள் சிறந்த முறையில் மன எழுச்சி வளர்ச்சியும் சமுதாய விருத்தியும் எய்துவர். இது அவர்களின் எதிர்கால வெற்றி வாழ்வுக்குத் தோன்றாத் துணையாக அமையும் என்பது மறுக்கவியலாத உண்மை. இத்தனை நன்மைகளையும் உவந்தளிக்க உகந்தது கூட்டுக் குடும்பமே என்பது கண்கூடாகும்.

கூட்டுக் குடும்பம் கடமைகளை அதன் அங்கத்தவரிடையே பங்கிட்டுக் கொடுப்பதால்; பரஸ்பர புரிந்துணர்வும், அன்பும் அவர்களிடையே தழைத்தோங்குகிறது. அவர்களுக்குப் போதிய ஓய்வும் கிட்டுகிறது. ஒன்றிணைந்து சமூக பணிகளில் இறை வழிபாட்டில் ஈடுபடவும் இக்கூட்டுக் குடும்பம் வழிவகுக்கிறது. ஆக மொத்தத்தில் மன அமைதிக்கும் உளமுதிர்ச்சிக்கும் இட்டுச் செல்வதற்கு சாலச் சிறந்தது கூட்டுக் குடும்பமே என்றால் அது மிகையான கூற்றல்ல.

நெருக்கடி, நோய், தனிமை, உயிரிழப்புகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளைக் கடந்து செல்கையில் தனிக்குடும்பமாக வாழ்வோர் படும் துயர் சொல்லும் தரமன்று. இத்தகைய தருணங்களில் தான் அவர்கள் கூட்டுக் குடும்பத்தின் மகிமையை உணர்வர். நிழலின் அருமை வெய்யிலில் தான் தெரியும்.


அடுத்து வெளிவருவது,

**நான் உளவியல் சஞ்சிகையின் 21வது ஆண்டு**

# சிறப்புமலர் -

உங்கள் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் உளவியல் சார்ந்ததாக, இன்றைய சமூக விழிப்புணர்வுக்கு ஏற்றதாக 15-12-94க்கு முன் அனுப்பி வையுங்கள்.

உங்கள் படைப்புக்களும் ஆலோசனைகளும்
நான் சிறப்பு மலரை அழகுபடுத்தட்டும்.

FUL-VUE

'Naan' Psychology - Magazine
O. M. I. Seminary, Colombuthurai.

# FOR YOUR VISIT

முதுமையிலும் இளமை

இளமையிலும் கவர்ச்சி

பார்வையும் பளிச்சிடுகிறது

முத்துப்பல் அழகைத் தருகிறது!

அதன் ரகசியம் இதுதான்

# MORAIS

**OPTICIANS AND DENTAL TECHNICIANS**
**50, CLOCK TOWER ROAD,**
**JAFFNA.**

அழகுத் தோற்றத்துக்கும், பார்வைத் துலக்கத்துக்கும்

• பரீட்சித்து அளிக்கும் கண்ணாடிகள் உண்டு!

பல் அழகுடன் சொல்லழகும் தர, தரமான பல் வருட

அனுபவ முத்திரை பதித்தவர்களை நாடுங்கள்!

# மொறாயஸ்

(வெலிங்டன் தியேட்டர் முன்பாக)
50, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

மணி ஓசை, 12, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்